# கலைமுகம்


காலாண்டுக் கலை இலக்கிய இதழ்

ஆடி – புரட்டாதி 1993



# இந்த முகத்தில்...


- கலைமுகம் அறிமுக விழா... - கொழும்பு
- கவிதைக் கலை... - வாகரைவாணன்
- விருந்து... - க. சட்டநாதன்
- விவாத அரங்கு... - தரிசனன்
- ஒரு தர்மத்தின்... - பர்ஜனன்
- நண்பரைப்போல்... - இன்பன்
- நீங்காத நிழல்கள் ... - திருமறைக்கலாமன்றம்
- கருத்து மேடை... - நீ. ஜெயசிங்கம்
- 83ன் பின்னர் சிறுகதை... - கோகிலா மகேந்திரன்
- இன்றைய நிகழ்வுகள்... - க. பாலநடராஜன்
- தொடர்புசாதனங்களின்... - ஆ. சிவநேசச்செல்வன் (M.A, M.Sc)
- Theatre and Dance ... - Th & D 2 - 1993
- மனந்திறந்த மடல்கள்... - ஆர்வலர்கள்

இதில் வெளிவரும் ஆக்கங்களோடு கலைமுகம் ஆசிரியருக்கு முழுக்க முழுக்க உடன்பாடு என்ற பொருளில்லை.

# கலைமுகம்

**KALAI MUGAM**

**காலாண்டு இதழ்**

1993

ஆடி - புரட்டாதி

கலை - 4

முகம் - 3



**தொடர்புகளுக்கு:**
Centre for Performing Arts
Hotel Imperial
14/14 A-1,Duplication Road,
Colombo.4,
Shri Lanka
Tel: 508722, 581257

திருமறைக்கலாமன்றம்
238,பிரதான வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை


# வணக்கம்

திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகள் இன்று பல்வகைப்பட்ட எதிரொலிகளை எழுப்பியவண்ணம் உள்ளன. பாராட்டுபவர் பலர்; வசை கூறுபவர் சிலர்; பக்க சார்பற்ற ஆக்கபூர்வமான விமர்சனங்களை அளிக்கும் அன்பர்களும் வேறு உளர்.

எல்லோருடைய கருத்துக்களையும், நன்கு எடைபோட்டு, கொள்ள வேண்டியவற்றைக் கொள்ளும் நோக்குடன், வரவேற்கிறோம். கலைப்பணியில் நிறைவோடு வளர அவற்றைக் குறை தீர்க்கும் ஊன்று கோல்களாகக் கணிக்கிறோம். இசையும் வசையும் வளர்ச்சியின் அறிகுறி என்று பெருமிதம் கொள்ளுகின்றோம்.

திருமறைக் கலாமன்றத்தின் அடித்தளம் நமது தமிழ் மண்; அதன் செயற்பாடுகளோ நமது மண்ணையும் நமது மொழியையும் நமது பண்பாட்டையும் மதித்து அன்பு செய்யும் நம்மவர்கள் அனைவரையும் - அவர்கள் எங்கு வாழ்ந்து கொண்டிருப்பினும் சரி - அணைப்பதாக உள்ளது.

நாம் எவ்வளவு விரிவுபட்டு இயங்கினாலும் நமக்கென ஒரு சில வரையறைகளை வகுத்துள்ளோம். அவைகளைக் கடக்க நாம் விரும்பவில்லை. இதைப் புரிந்து கொள்வது ஒரு சிலருக்குக் கடினமாக உள்ளது. எவர்எப்படி எண்ணினும் அரிய கலைகள் மூலம் இறைப்பணி - அறப்பணியை - ஆற்றும் நமது குறிக்கோளிலிருந்து நாம் அணுவளவும் அகல மாட்டோம்.

**பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்**



# கலைமுகம் - அறிமுக விழா
# 06.06.1993

## அறிஞர்கள் கூறியவை

"கலைமுகம்" சஞ்சிகை வாயிலாக நாட்டுக் கூத்துப் படங்களையும், பாடல்களையும் பார்க்கும்போது எமது பாரம்பரிய கலை வடிவங்கள் எவ்வளவு தொன்மையும் அழகும் வாய்ந்தவைகள் எனப் பிரமிக்கத் தோன்றுகின்றது. இவற்றைப் பாதுகாக்க இம்மன்றம் எடுக்கும் முயற்சிகளை பெரிதும் பாராட்டுகின்றேன்.
**திரு. ஆ. சிவகுருநாதன்**
பிரதம ஆசிரியர் - தினகரன்

திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடாகிய "கலைமுகத்தை" பருவ இதழ்கள் வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம். அருட் கலாநிதி. மரிய சேவியரின் பணிகள், தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் பணிகளைப் போன்று காலத்தால் அழிக்க முடியாதவை.
**திரு ஆ. சிவநேசச்செல்வன்**
(பிரதம ஆசிரியர், வீரகேசரி)

நூல்களைத் தேடிப் படிக்க வேண்டியவர்களுக்கு "கலைமுகம்" மிகவும் பயன் அளிக்கக் கூடிய ஒரு சஞ்சிகையாகும். பல காத்திரமான கட்டுரைளைத் தாங்கி வருவதால் இச் சஞ்சிகை ஊடாக நூல்கள் இல்லாத குறையை ஓரளவு நிவர்த்தி செய்யலாம்.
**பேராசிரியர். எஸ். சந்திரசேகரன்**
தலைவர்,
கல்வி.விஞ்ஞானபீடம்,
கொழும்பு
பல்கலைக்கழகம்.

போர் நிகழும் இக்கால சூழ்நிலையில்தான் யாழ்ப்பாணத்தில் அதிகமதிகமாக கலை இலக்கியம் வளர்கின்றது. திருமறைக் கலாமன்றம் நாட்டுக்கூத்துக்கு எனத் தனிவிழா எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. "கலைமுகம்" நாட்டில் உள்ள எல்லா நூல் நிலையங்களுக்கும், சனசமூக நிலையங்களுக்கும், சகல பாடசாலைகளுக்கும் சென்றடைய ஆவன செய்யப்பட வேண்டும்.

**பேராசிரியர். செ. சிவஞானசுந்தரம் (நந்தி)**
(மருத்துவபீடம்யாழ்பல்கலைக்கழகம்)

"கலைமுகம்" சஞ்சிகையின் அட்டைப்படம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. அமைப்பு முறையும் அழகாக இருக்கின்றது. எதிர்காலத்தில் இன்னும் நவீன உத்திகளைக் கையாண்டு மேலும் சிறப்புற்று வளரும் என்பதில் சந்தேகம் இல்லை.

**திரு. மேமன் கவி**

தொகுப்பு:
அம்புறோஸ் பீற்றர்

குறிக்கப்பட்ட கால நேரத்தில் இம்மன்றத்தின் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது என்னை மிகவும் கவர்ந்துள்ளது.
**திருமதி கமலினி செல்வராஜன்**

ANTHONY JEEVA
57, MAHINDA PLACE,
COLOMBO-6

# கவிதைக் கலை சில சிந்தனைகள்

வாகரைவாணன்

கையிலே பேனா எடுத்தால்போதும். கவிதை எழுதி விடலாமென்று நினைக்கின்ற காலமிது. இதற்கு அனுசரணையாக புதுக்கவிதை என்ற புதிய இலக்கிய வடிவமும் கிடைத்திருக்கின்றது. மரபுக் கவிதையின் மரணக் குழியிலிருந்து தமிழ்க்கவிதை இலக்கியத்தின் விடியலுக்காகக் கூவுகின்றோம் என்ற குரல் வேறு, ஓங்கி ஒலிக்கின்றது. ஏன் இந்தக் குரல்? இன்னும் தமிழ்க் கவிதை உலகம் தனது விடியலைக் காணவில்லையா? – இப்படி வினாக்கள் எழுகின்றன.

மரபுக்கவிதையின் மரணத்தில் தோன்றிய புதுக்கவிதைப் பூஞ்செடிகள் புஸ்பித்துக் கொட்டுகின்றன என்ற உற்சாகப் பேச்சுக்கு அறியாமைதான் ஊற்றுக்கண். அதாவது மரபு என்ற சொல்லுக்கு நம்மவர்களில் பலர் கொண்டிருக்கும் மயக்கந்தரும் பொருளே கவிதை இலக்கிய உலகை இன்று இருகூறாகப் பிரித்து வைத்திருக்கின்றது. மரபு என்ற சொல்லுக்கு பழைமை, முறைமை என்றெல்லாம் பொருள் உண்டு. ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டு கால வரலாற்றையுடைய தமிழ்க்கவிதை இலக்கியம் அந்தந்தக் காலப்பகுதியை ஒட்டிய மக்களின் உணர்வுகளையும், சம்பிரதாயங்களையும் உள்ளடக்கிக்கொண்டே வளர்ந்து வந்துள்ளது. இதனையே இலக்கிய மரபு என்கின்றோம். உதாரணத் திற்கொன்று. காதல் பற்றிய கற்பனையை அகம் என்றும் வீரம், புகழ், கொடை பற்றிய துறைகளைப் புறம் என்றும் பகுத்திருப்பது மரபை ஒட்டிய சிந்தனையாலேயே. இதுபோன்றே இனிக்கும் காதல் நிகழ்ச்சி ஒன்றைப் புலவன் ஒருவன் பாடும்போது அதற்குரிய முதல் கரு உரிப்பொருள்களை அமைத்துப்பாடுதலும் மரபைச் சார்ந்ததன்றோ? இந்தப் பின்னணியிலேயே மரபுக் கவிதை என்ற சொற்றொடரும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். அதாவது மரபுக் கவிதை என்பது காலங்காலமாக அனுசரிக்கப்பட்டு வரும் சில இலக்கிய நியதிகளைக் கொண்டது. அவ்வளவுதான். இந்த நியதிகளில் இலக்கணமும் ஒன்று.

சரி இலக்கணம் என்றால் என்ன? இதனை– ஏதோ விலங்கு, சிறை என்றெல்லாம் இன்றைய கவிஞர்கள் விளங்கிக் கொண்டிருப்பதற்கு தமிழ்க்கவிதை இலக்கியத்தின் வரலாறு அவர்களுக்குத் தெரியாததுதான் காரணம் எனலாம்.

இலக்கணம் என்பது இலக்கியம் ஒழுங்குற அமைய இடப்பட்ட எல்லை வேலியே. இந்த வேலி இலக்கியம் இப்படி இருந்தால் நல்லது என்ற எண்ணத்தினால் அமைக்கப்பட்டதேயன்றி இலக்கியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஏதேச்சதிகார உணர்வினால் தரப்பட்ட பண்டிதச் சட்டம் அல்ல. விளைபயிருக்கு வேலி வேண்டும். சமுதாயத்திற்குப் பாதுகாப்புத் தருவது சட்டம். கரைக்குள் அடங்கியிருக்கும் போதுதான் கடல் அமைதியாக மட்டுமல்ல அழகாகவும் காட்சியளிக்கின்றது. இதைப் போலத்தான் இலக்கியத்திற்கு இலக்கண வேலி நடப்பட்டது. இலக்கணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக இத்தகைய எடுத்துக் காட்டுக்களை மரபுக்காரர் முன்வைக்கும்போது, கவிதையின் மூலமாகிய உணர்ச்சிக்குக் கட்டுப் போடுவது, எப்படிப் பொருந்தும் என புதுக்கவிதைக்காரர் போர்க்கோலம் பூணலாம்.

அவர்கள் வாதத்திலும் அர்த்தம் இருக்கிறது; மறுப்பதற்கில்லை.

தமிழ்க்கவிதை இலக்கியத்திற்கு இந்த வேலிகளைத் தந்த முதற் புலவன் தொல்காப்பியனே. அவருக்குப் பின் தோன்றிய சோழர்காலத்து அமிர்தசாகரர் தமிழ்க்கவிதையின் போக்கை உணராது, ஏற்கனவே இடப்பட்ட வேலிகளைச் சற்று இறுக்கமாக்கிவிட்டார். இச்செயல், பழையவைகளை மட்டும் மனனம் செய்து பழக்கப்பட்ட படித்த ஒரு கூட்டத்திற்குப் பாயசம் போலாயிற்று.

பாப்புனைய வேண்டுமா? யாப்புப்படி என்று இவர்கள் பறை அறைந்தார்கள். காலுக் கல்ல செருப்பு; செருப்புக்கே கால் என்பது இவர்கள் கட்சி. நாயக்கர் காலத் தமிழ்க்கவிதை இலக்கியம் நலிந்து போனதற்கு இக்கட்சிக்காரர் கொடி கட்டிப் பறந்ததே காரணம்.

இலக்கணத்திற்கு ஏற்ப இலக்கியத்தை அமைத்துக் கொண்ட இவர்கள், அரச சபைகளில் ஆஸ்தான வித்துவான்களாக அலங்காரச் செய்யுள் பாடிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கொடுமை கண்டு தனக்குள்ளே குமுறியவன்தான் நமது எட்டய புரத்து மகாகவி சுப்பிரமணிய பாரதி. எனினும், இது பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் நவகவிதை படைப்பதற்காக-நாட்டுப்புற இலக்கியங்களை நாடி ஓடினான் அவன். அங்கே, அன்றாடச் சோற்றுக்காக அலைந்து திரியும் பிச்சைக்காரன் அலைகடலில் வலை வீசும் மீனவன் முதலானோர் அமுத இசை பொழிந்து அவனை வரவேற்றனர். பாரதி மகிழ்ந்தான். தமிழ்க்கவிதை இலக்கியம் பாரதி உருவில் தனது விடியலைக் கண்டது.

பாமரமக்களின் பாட்டு வடிவங்களைப் பயன்படுத்தி இறவாப்புகழ் படைத்த கவிதை இலக்கியத்தைப் படைத்த பாரதிக்கு இன்னும் தமிழ்க்கவிதையின் வடிவை எளிமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவே, இனிய, எளிய வசன கவிதைகள் அவன் இதயத்திலிருந்து துள்ளி வந்தன. உண்மையில் பாரதியின் வசன கவிதைகளுக்கு உந்து சக்தியாக விளங்கியவர் வால்ட்விட்மன் (1819-1892) என்னும் உலகு புகழ் அமெரிக்கக் கவிஞனே. ஆயினும் பிரபல பிரெஞ்சுக் கவிஞன் ஆர்தர் ராம்போ என்பவனே பாரதியின் வசன கவிதைக்கு ஆதர்சம் என்று சொல்வாரும் உண்டு. இச்சர்ச்சை மேலும் ஆய்விற்குரியது என்றாலும் ஓர் அந்நிய இலக்கிய வகையை உள்வாங்கி பாரதி பாடிய வசன கவிதைகள் தம் தாயகத்து கிராமிய இலக்கிய வடிவங்களைத் தழுவி அவனால் பாடப்பட்ட கவிதைச் செல்வங்களை வென்றுவிடவில்லை என்பதை இவ்விடத்தில் நாம் நினைவு கூருதல் நல்லது. இங்கேதான் மண்வாசனையின் மகிமையும், தமிழ்க்கவிதை இலக்கியத்தின் பாரம்பரியச் சிறப்பும் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. பாரதிக்குப் பின் பிச்சமூர்த்தி, கு.ப.ராமுதலான செவிலித் தாய்மார்களால் சீராட்டி வளர்க்கப்பட்ட புதுக்கவிதை இன்று இலக்கிய அரியணையில் ஏறி அமர்ந்து விட்டது என்பது உண்மைதான். அதற்காக இனிமேல் மரபுக்கவிதைக்கு எதிர்காலமே இல்லையென்று புதுக்கவிதையாளர்கள் இரைச்சல் இடுவதில் அர்த்தமே யில்லை. காரணம் தமிழன் வாழ்வு இசையோடு இரண்டறக் கலந்தது. இறைவனையே இசை வடிவில் காண்பவன் அவன். இதனால் தான் அவன் கவிதை முழுவதும் ஓசை (ஒழுங்குபடுத்தப்பட்ட ஓசை தானே இசை) ஊடுருவி நிற்கின்றது.

உன்னிப்பாகக் கவனிப்பவர்களுக்குத் தமிழ்க்கவிதை இலக்கணம், ஓசையை அடிப்படையாகக் கொண்டிலங்குகிறது எனக் கூற வேண்டியதில்லை.

## வழி

**எந்தையும் தாயுமே இன்பவழி செல்ல**
**வந்து பிறந்தோம் துன்பவழி,**
**தாய் தரும் பால் ஒரு பாதிவழி; பிள்ளை**
**தனி நடந்திடவே மீதிவழி.**

**ஐந்து வயதினில் பள்ளிவழி; அங்கே**
**அச்சம் அடைந்திடில் கள்ளவழி,**
**கல்வி என்பதோர் காதவழி; அங்கே**
**கல்லு விழுந்திடில் வீதிவழி.**

**காதல் வருவது பருவவழி; அந்தச்**
**சாதல் வருவதும் காதல்வழி,**
**அம்பிகாபதி வந்தவழி; அவன்**
**ஆவி போனதும் அந்தவழி.**

**சாந்தி அன்புமே அமைதிவழி; நல்ல**
**சமயம் ஆவதும் சாந்திவழி,**
**காந்தி யேசு இவர் வந்தவழி; அருள்**
**காதல் ஆனதே அந்தவழி.**

**- பாவலன். பா. சத்தியசீலன் -**

எழுதப் படிக்கத் தெரியாத கிராமிய மக்களின் இனிய பாடல்களில் பல, யாப்பு இலக்கணத் திற்கேற்றாற் போல் இருப்பதற்குக் காரணம் இதுவே. சங்ககாலத்தில் பெருவழக்காயிருந்த கலிப்பாவும் பரிபாடலும் நாட்டார் பாடல்களைச் சார்ந்தவையே. பல்லவர் காலத்துப் பக்திப் பாடல்களின் அடிநாதமாக விளங்கியது பாமரத் தமிழரின் பாவளமே. குறள் கவிதையின் கூர்ம அவதாரம் என்றால், அதன் விஸ்வரூபமாகத் திகழும் விருத்தம் பல்லவர் காலத்துப் பக்திகப் பாடல்களிலிருந்தே படிமம் எடுத்தது என்ற உண்மையை இக்கட்டத்தில் எண்ணிப் பார்ப்பவர்கள், மரபுக் கவிதை எதனை முதலாகக் கொண்டிருக்கிறது என்பதை எளிதாகக் கண்டு கொள்வார்கள்.

ஆனால், தமிழ்க்கவிதை இலக்கியத்தின் இந்தத் தனித்துவமான வளர்ச்சிப் போக்கை உணர்ந்து கொள்ள முடியாத புதுக்கவிதையாளர்கள் சிலர், செவிப்புலனுடையதாக இருந்த கவிதை இன்று கட்புலனுடையதாகிவிட்டது என்கிறார்கள். நாவிற் குரிய சுவை உணர்வு நாடி நரம்புகளுக்கு நகர்ந்துவிட்டது என்று சொல்வது போல் இருக்கின்றது இது.

இதன் காரணமாகவே புல்லாங்குழல் போன்ற புதுக்கவிதையை இன்று எவரும் எந்த நேரத்திலும் வாசிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் வித்துவான்களின் விரல்கள் மட்டும்தான் மரகதவீணை என்ற மரபுக்கவிதையில் விளையாடலாம் என்று சொல்லவில்லை. அப்படி ஒரு நிலை மீண்டும் ஏற்பட்டால் விளைவது அபஸ்வரமாகத் தான் இருக்க முடியும். இது தமிழ் இலக்கிய வரலாறு கற்றுத் தந்த பாடம்.

எது கவிதை என்ற கேள்வி எல்லா மூலைகளிலும் எழுப்பப்படுகின்றது. இது ஒரு பழைய கேள்விதான் என்றாலும் புதுக்கவிதையின் பிரவேசத்திற்குப் பிறகு கவிதையின் உயிர்நாடிபற்றி ஒரு பெரும்போரே இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்போரை ஏற்று நடத்திக்கொண்டிருப்பவர்கள் இரு வேறு தீவிர சிந்தனைப் போக்குடையவர்கள். ஒரு பகுதியினர் பத்து வயதில் பாவை ஒருத்தி அணிந்த பாவாடை சட்டையையே அவள் தனது இருபது வயதிலும் அணியவேண்டுமென்று அடம்பிடிப்பவர்கள் (கலியும் பரிபாடலும் காதல் பாட்டுக்களுக்கு ஏற்றவை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதை இவர்கள் இன்றும் கடைப்பிடிக்கிறார்களோ என்னவோ?) மறுபகுதியினர் ஆடையே வேண்டாமென்று அடாவடித்தனம் பண்ணுபவர்கள். (இவர்கள் தாம் இன்று படைக்கும் கவிதைகளுக்கும் ஏதோ ஒருவித ஒழுங்கைக் காட்டுகிறார்கள். இவ்வாறான ஒரு ஒழுங்கையே நாம் இலக்கணம் என்கிறோம்.) இரு பகுதியினரின் இந்தத் தீவிரப் போக்கிற்குக் காரணம் எது கவிதை? என்ற கேள்விக்கு ஏற்ற பதிலை இவர்கள் காணாதது தான். எனினும் இப்பணி அவ்வளவு எளிதானதல்ல.

கவிதை பற்றிக் கனமான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்பவர்கள் - அதன் உருவம் - உள்ளடக்கம், பற்றிய கருத்து மோதல்களிலும் ஈடுபடுவதைக் காண்கின்றோம். இதற்கு எத்தனையோ பதில்கள்..... பட்டிமன்றங்கள்.... விவாதங்கள்.... இன்னும் சர்ச்சை தொடருகின்றது.

கருத்துப் பதிவுகளின் தொகுப்பா கவிதை? எழுப்பப்படும் கேள்விகளில் இதுவும் ஒன்று. இந்தக் கேள்விக்கான பதில் ஆம் என்றால் அதற்குத்தான் அடிநீள வசனம் இருக்கின்றதே என்ற மறுப்பும், ஆயத்தமாக இருக்கின்றது. வார்த்தைகளின் ஊர்வலம் தான் வசனம். கவிதை என்பது ஓர் இனிய காட்சி. சில சொற்களுக்குள்ளே அழகான காட்சி ஒன்றைச் சிறைப்பிடிக்க முடியும். குறியீடுகளும் படிமமும் கொண்டதுதான் கவிதை என்னும் கூற்று. நமக்கு குறைமாதக் குழந்தை ஒன்றையே நினைவூட்டுகின்றது. எதற்கும் ஒரு பரிணாமம் - படிமுறை வளர்ச்சி இருக்கின்றது; ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் எந்த வளர்ச்சியும் அதன் அடிப்படையை ஒட்டியே அமைய வேண்டும். அப்போதுதான் அது ஆரோக்கியமானதாக இருக்க முடியும்.

“சொற் சிக்கனம்” கவிதைக்குச் சோபிதத்தைத் தரும். உண்மைதான். அதற்காக வார்த்தைப் பஞ்சத்தையும் கவிதை என வாதாடலாமா? இச்சந்தர்ப்பத்தில் - கவிதையின் உயிராக இருப்பது ஓசை என்று மரபுக் கவிதையாளர்களும் - இக்கருத்தை மறுத்து, புதுக்கவிதையாளர்கள் வேறு ஒன்றை இனங்காட்டினாலும், இரு பகுதியினரும் கவிதை யினை அனுபவ ரீதியாக உணரவில்லை என்றே அர்த்தம் கொள்ள வேண்டும். ஏனென்றால் கவிதை என்பது ஒரு சடப்பொருளன்று; அதை அறுத்து கூறு கூறாக்கி பரிசோதனை செய்து பார்த்திட. இந்தப் பரிசோதனையில் ஈடுபடுபவர்களே கவிதையில் இது இனிக்கின்றது, அது கசக்கின்றது என்று விமர்சனம் செய்பவர்கள். கவிதை என்பது ஓர் அனுபவம். அதற்கு மொழி ஒரு வடிவத்தை அளிக்கின்றது. கவிஞனின் இந்த அனுபவத்தை வாசகனும் பெறும்போதுதான் கவிதை உணரப்படுகின்றது.
இறைவன் என்பவன் யார்? இப்படி ஒரு கேள்வி நம்மை எதிர்கொள்ளும் போது நாம் எத்தனையோ

விதமான பதில்களை அளிக்கின்றோம். ஆயினும்-எந்தப் பதிலும் பூரணமானதாக இருப்பதில்லை. ஏன்? இறைவன் என்பவனை அனுபவத்தின் ஊடாகத்தான் அறிய முடியுமே தவிர, ஆராய்ச்சிக் கண்கொடல்ல. உபநிடத ரிஷிகள் இதற்கு நல்ல உதாரணம். கவிதையும் ஒருவகையில் கடவுளைப் போன்றதுதான். அனுபவமே அதை விளக்கும். இந்த நிலைப்பாட்டை நாம் நெஞ்சில் நிறுத்துவோமானால் கவிதை உலகம் இரு வேறு கட்சிகளாக நிற்க வேண்டியதில்லை.

இலக்கியத்தின் வடிவம் எப்படி இருக்க வேண்டும்? கருப்பொருளாக எதைக் காட்டலாம்? ..... திருவுடைய கவிஞரே தீர்மானிக்க வேண்டிய விடயங்கள் இவை. விமர்சகர்கள் இதில் புகுந்து விளையாடக் கூடாது. பாரதியைப் பொறுத்தவரையில் அவனது பெரும்பாலான பாடல்களின் கருப்பொருளாக இருப்பது சுதந்திர வேட்கை. அவன் வாழ்ந்த காலம் அப்படி. பாரதிக்குப் பின் வந்த பாரதிதாசன் கவிதைகளில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையே நாம் சந்திக் முடிகின்றது. இதுவும் சூழ்நிலையால் ஏற்பட்ட விளைவே.

இந்த இரு கவிஞர்களின் படைப்புக்கள் நமக்கு எதைக் காட்டுகின்றன? காலத்திற்கேற்ப கவிதையின் வடிவமும், கருப்பொருளும் மாறலாம் என்ற நிதர்சனத்தைத் தானே! கவிஞர்களே இந்தக் காரியத்தைச் செய்கின்றார்கள் என்றாலும் அவர்கள் வாழும் காலமும் அதற்குத் துணையாக நிற்கின்றது என்ற உண்மையையும் நாம் மனத்திற்கொள்ள வேண்டும். இலக்கியம் காலத்தின் கண்ணாடியாக இலங்குவதும் இதனால் தான்.

கவிதையின் பயன்பாடு பற்றியும் நம்மிடையே கருத்து வேறுபாடு நிறையவே இருக்கின்றது. கருத்துக்களே கவிதையின் உயிர் என்பவர்கள் அது மனிதனை வழிப்படுத்த வேண்டும் என்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையின் ஒரு பக்கத்தை மட்டும் பார்ப்பவர்கள். அது மட்டுமல்ல, கவிதையின் அடிப்படை அம்சத்தையே நிராகரிப்பவர்கள்.

மனிதன் எப்போதும் சிந்தனை உலகில் சீவிப்பதில்லை. அவ்வப்போது அவன் "அந்த" உலகில் இருந்து விடுபட்டு ஐம்புல இன்பங்களை நாடி ஓடுவதுண்டு. இது அவனைப் பொறுத்தவரையில் அவசியமானதுங்கூட. இல்லையென்றால் அவன் தன் நிலையையே இழந்து விடக்கூடும். எண்ணங்களிலும் கவலைகளிலும் ஆழ்ந்து கொண்டிருக்கும் மனித மனத்தைச் சமநிலைப்படுத்தும் அரிய பணியை இவ்வின்பங்களே ஆற்றுகின்றன. கவிதை-இவ்வின்பங்களில் சிலவற்றையாவது வழங்கும் கருவிகளில் ஒன்று. அழகுக் கலை என இது அழைக்கப்படுவதும் இதனால்தான்.

கவிதையின் இந்த அடிப்படைத் தன்மையை, மறுப்பவர்களே, கருத்துக்களைச் சொல்லுபவையாக கவிதைகள் இருக்க வேண்டும் என்பவர்கள். அறிவியல் சார்ந்த கருத்துக்களைக் கொண்டவையாக அவை இருக்க வேண்டும் என்றும் வாதிக்கின்றார்கள். இத்தகையவர்கள் இன்று மட்டுமல்ல-அன்றும் இருந்திருக்கிறார்கள் என்பதை, கருத்துக்களின் திணிப்பால் தம் இயல்பை இழந்துவிட்ட கவிதைகளே காட்டிக் கொடுக்கின்றன. இக்கருத்தை இங்கே குறிப்பிடுவதனால்-கருத்துக்கள் இல்லாமல் கவிதையா? என்று ஒரு சாரார் கணை தொடுக்கலாம். கவிஞன் ஒருவன் ஓர் இனிய இயற்கைக் காட்சியை, தனது கவிதைக்குள் சிறைப்பிடித்துக்காட்டும்போது, அவன் கருத்துக்களையா அள்ளி வைக்கிறான்? "தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந் தாங்க" என்று கம்பன் தனை மறந்து பாடும்போது, அங்கே ஒரு மருத நிலக் காட்சியல்லவா நம் மனத்தை நிறைக்கிறது?

"காணி நிலம் வேண்டும்" என்ற பாரதியின் கவிதை நமக்கு எதைக் காட்டுகின்றது? ஒரு சிறு வளவு. அதில் உருவாகும் ஓர் அழகிய வீடு - நிலவொளி - நெஞ்சில் இனிக்கும் தென்றல் காற்று - நீண்டுயர்ந்த தென்னை மரங்கள் - இப்படியொரு காட்சியைத் தானே அவன் எழுதிக் காட்டுகின்றான்? ஒரு கவிஞனின் உள்ளத்தில் கவிதை தானாகவே ஊற்றெடுக்கின்றதேயன்றி உருவாக்கப்படுவதில்லை. உருவாக்கப்படும்போதுதான் கருத்துக்களும் வலிந்து உள்ளே செலுத்தப்படுகின்றன. கவிதை என்னும் மலர் தன் இயல்பை இழந்து கருகிப்போவது இதனால்தான். இந்த நிலை மரபுக் கவிதைகளுக்கு மட்டுமன்றி, புதுக்கவிதைகளுக்கும் ஏற்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடைசியாக-கவிதை ஒன்று காலத்தை வென்று நிற்கின்றதென்றால்-அதற்குக்காரணம் - அது வாசகர்களின் உள்ளத்தை ஈர்க்கும் சக்தி பெற்று விளங்குகின்றது என்பதுதான். அந்தச் "சக்தி"எது என்று கண்டறியும் திறன், அக்கவிதையைப் படிப்போரின் அனுபவத்திற்கே உண்டு. இது ஒருவகையில் மனிதன், தெய்வம் எங்கே இருக்கின்றது என்று தேடுவதைப் போன்றதாகும்.

# விருந்து

சிறுகதை

க. சட்டநாதன்



கனகுவுக்கு வயிறு புகைந்தது. காலையில் குடித்த வெறுந்தேத் தண்ணி. தேயிலையின் கசப்பு நுனிநாக்கில் ஊறலெடுத்தது. காறி உமிழ்ந்தவன்; மடியிலிருந்த சீவலை எடுத்து, வாயில் போட்டுக் கொண்டான். வெற்றிலை சருகாயிருந்தது. அதையும் சுண்ணாம்பு தடவாமலே போட்டுக் கொண்டான். பீடி பற்ற வேண்டும் போலிருந்தது. "கையிலை காசில்லாமல் பீடியும் வெத்திலையும் தான்...." அலுத்துக்கொண்டவன், வீதியில் இறங்கி நடந்தான்.

பவானி ரீச்சரின் ஞாபகம் வந்தது. சின்னச் சின்ன வேலை - பூச்செடிகளுக்கு நீர்வார்ப்பது, மண் அணைப்பது, பசளை இடுவது; சடைத்து வளர்ந்துவிட்ட வாழை நிரைகளைச் சீர் செய்வது என்று - ஏதாவது அவவிடம் எப்பொழுதும் இருக்கும். கூலி விஷயத்திலும் அவ தாராளம்.

கேற்றைத் திறந்தவன், "ரீச்சர்...." என்று குரல் கொடுத்தான். ஆள் சிலமனில்லை. அவ வளர்க்கும் பெட்டை நாய்தான் குரைத்துக் கொண்டு பாய்ந்து வந்தது. பக்கத்து வீடு பார்த்துத் திரும்பியவனுக்கு, "ரீச்சரில்லை கோயிலுக்கு...." என்று பதில் வந்தது.

"மாஸ்ரரும் ரியூசனுக்குப் போயிருப்பார்...." என நினைத்தவன், மீளவும் வீதியில் இறங்கி நடந்தான்.

"எத்தனை நாட்களாகி விட்டன. ஆற அமர இருந்து, வயிறாரச் சாப்பிட்டு.... அவள் பெட்டை தனம் பாவம்.... கருவுயிர்த்து ஆறுமாசம்.... தலைச்சன் பிள்ளை.... அது கவலையாகி விடக்கூடாதே என்ற கவலை அவளுக்கு.... அவளுக்கு மட்டும்தானா....?"

மனதில் திரண்டு குமையும் நினைவுகள்.

"கனகு, ஒரு நிமிஷம் மோனை!" பரமசிவத்தாரின் குரல் அவனது சிந்தனையைக் கலைத்தது.

"உந்த வேம்பிலை ஏறி இரண்டலக்கு வேப்பம்பூ தட்டி விடணை.... அவள் கடைக்குட்டி வடகம் வேணுமெண்டு ஆசைப்படுறாள்...."

அவர் நயிச்சியமாய்ப் பேசுவதில் இருந்து, அவரிடம் தம்பிடி கூடப் பெயராது என்பது தெரிந்தும், "கேட்ட வாய்க்குத் தட்டேலுமே...." என நினைத்தவனாய், வேம்பில் ஏறி, அவர் சுட்டிக் காட்டிய கொம்புகளைத் தட்டிவிட்டுக் கீழே இறங்கி, அவர் நிற்பதையே பொருட்படுத்தாமல் வெளியே நடந்தான்.

இரவு, தீட்டுப்பச்சைக் குறுநலில் தனம் உப்புக் கஞ்சி காச்சினாள். "அவள் பாவம் குடிக்கட்டும்...." என இவன் இருந்தபொழுது, அவள் கஞ்சியை வார்த்து இவன் முன்னால் வைத்தாள்.

"குடியுங்க.... எத்தனை நாள்தான்

**சட்டநாதன் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. தனித்தன்மை வாய்ந்த ஒரு பண்பான எழுத்தாளர். பெண்ணின் உள்ளக் கிடக்கையை வார்த்தையில் வடிப்பதில் வல்லவர். அவர் எழுத்துக்களில் மனித நேயம், மானுடத்துவம் தொனிப்பதைக் காணலாம். பூரணி காலாண்டு இதழின் இணையாசிரியராகவும் இருந்தவர். "மாற்றம்", "உலா" எனும் சிறுகதை தொகுப்புகளின் மூலம் ஈழத்தமிழ் வாசகர்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர்.**

கால்வயிறும் அரை வயிறுமாய்க் கிடக்கேலும்...."

அவளது குரலில் இழைந்த துயரம் இவனைக் கலங்க வைத்தது.

பதில் ஏதும் தராமல் மௌனமாய் எழுந்தவன், பானையை எடுத்துப் பார்த்தான். சிறிதளவு கஞ்சிதான் அதில் மீதமிருந்தது. மீளவும் வந்து, அவள் அருகாக உட்கார்ந்து கொண்டவன், வினயம் ததும்ப, "நீ முதலிலை குடியம்மா...." என்றான்.

அவள் இரண்டு வாய் குடித்து விட்டு, பானையில் இருந்ததையும் வார்த்து இவனுக்குத் தந்தாள்.

குடித்ததாய்ப் பாவனை பண்ணியவன், திரும்பவும் மிகுந்த நெகிழ்ச்சியுடன் அவளை உபசரித்து; அவனாகவே இரண்டு வாய் அவளுக்கு ஊட்டவும் செய்தான்.

அவள் சற்று உணர்ச்சி வசப்பட்டவளாய், அன்பு ததும்ப, விழிகளை அலர்த்தி அவனையே பார்த்திருந்தாள். அந்தக் கண்களின் ஒளி அவனைத் தொட்டது.

"என்னம்மா.... என்ன வேணும்....?"

குழைந்தவன், அவளது தலையும் கூந்தலை வருடியபடி, அவளை ஆரத்தழுவி, அவளது நெற்றியில் முத்தமிட்டான்.

அவனது உள்ளில் ஏதோ உருகிக் கரைவதான உணர்வு.

"இவள்.... இந்தப் பெட்டையில்லை என்றால்.... நொந்து சீரழிஞ்சு போன இந்த வாழ்க்கையில.... என்ன மிஞ்சும்.... உயிர்ப்பும் ஈரமுமாய் இருப்பவள் இவளல்லவா....!"

தனலட்சுமியை அவன் கண்டு உறவு கொண்டதே ஒரு தனிக்கதை.

• • • • •

"சித்தங்கேணிப் பிள்ளையார் கோயிலுக்குக் கிழக்காலை, சடைத்துக் கிடக்கும் பனங்கூடலை ஊடறுத்துச் செல்லும் ஒற்றை யடிப்பாதையிலை நடந்தால் என்ரை குடிசை வரும்...."

தவராசா அப்படித்தான் குறிப்புச் சொன்னான்.

"கையிலை மடியிலை ஏதென் முடக்கமெண்டா வீட்டுப்பக்கம் வாவன்... தில்லையற்றை புண்ணியத்திலை நானிப்ப நல்லா இருக்கிறன்...."

"அவன்ரை சொல்லை நம்பி வெளிக்கிட்டாச்சு. வீட்டிலை அவன் இருக்க வேணுமே....! இல்லையெண்டா வெளியிலை தலை காட்டேலாத கிரிசை கேடாய்த்தான் போயிடும்...."

நான்கு நாட்களுக்கு முன்னர், தம்பிராசா வாத்தியார், "அரைத் தூக்கு விறகு கொண்டு வந்து போடு மோனை...." என்று நூற்றி எண்பது ரூபாய் இவனிடம் தந்தார். அதை, எதோ அவசரத்துக்கு மாறியதால் அவரது முகத்தில் முழிக்க முடியாமலே போய்விட்டது இவனுக்கு.

"அந்த விறகை எடுத்துப்போட்டு விட்டுத்தான் மறுவேலை பார்க்க வேணும்...."

மனசு கள்ளப்பட்டதான தவிப்பு அவனுக்கு.

"இவ்வளவு தொகைக்கு தவராசாவை நம்பிப் போறது சரியா....?

அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

"மானங் கெட்ட பிழைப்பு...." என்று மாஸ்ரர் சொல்லி விடக் கூடாதே என்ற பயமும் கவலையும் வேறு அவனை அலைக்கழித்தது.

"சுன்னாகச் சந்தையிலை தவராசாவை எதேச்சையாகச் சந்தித்தது கூட இந்தச் சிக்கலிலை இருந்து விடுபடத்தானா."

இருட்டில் இருந்தவனுக்கு வெளிச்சம் காட்டின மாதிரி - ஒரு சந்திப்பு அதுஎன இவன் நினைத்துக் கொண்டான்.

தவராசா சொன்னது போல, பனங் கூடலின் உள்ளாக அந்த ஒற்றையடிப்பாதை முடிவடையும் இடத்தில் - அவனது குடிசை இருந்தது.

குடிசை சற்று விசாலமானது. பனை ஓலையால் வேய்ந்தது. புதிதாக; புனிதமாக பர்னசாலை மாதிரி இருந்தது.

இவன் தயக்கத்துடன் குரல் கொடுத்தான். கூச்சம் குரலில் இழைந்தது.

அதிக உயரமில்லாத, ஒடிந்து விழக்கூடிய இதத்துடன், ஒரு இளைய பெண் - ஒளிரும் தாமிர நிறத்தில், சிறிய மெல்லிய மூக்கும், குழந்தைத்தனம் கசியும் கன்னங்களும், பெரிய கனவு காணும் கண்களுமாக - இவனது குரலுக்குப் பதில் தந்தபடி வந்தாள்.

"ஆரது.... ஆரைப்பார்க்க வேணும்....?

தடைகளேதுமற்ற சரளம்.

ஒருகணம் மௌனியாக அவளையே பார்த்தபடி அவன் நின்றான்.

"நீங்கள் கனகுதானே.... அண்ணன்ரை...."

பேசும்போது - அவளது கண்களில் சுடர்த்த ஒளியும், இதமும், கபடற்ற தன்மையும் அந்தப் பனிபடர்ந்த இளங் காலைப் பொழுதில் அவனைப் பரவசம் கொள்ள வைத்தன.

"நீங்கள்....?" என்று தடுமாறியவனைப் பார்த்து - "தனலட்சுமி" என்று பதில் தந்தாள்.

மீளவும் குழம்பியவனைப் புரிந்து கொண்டவளாய், தனது வலது கரத்தால் நெற்றியையும் இடது கரத்தால் மோவாயையும் மறைத்தபடி நின்றாள்.

அவன், அவளை அடையாளம்

கண்டு, ஆச்சரியம் தாளாமல், "எட எங்கடை தவராசான்ரை தங்கச்சி...." என்றான்.
"க்கூம்....", என்று மிழற்றியவள், தொடர்ந்து கலீர் எனச் சிரிக்கவும் செய்தாள்.
அவளது குறும்புத்தனத்தில் திழைத்து நின்றவனை உபசரித்து, குடிசையின் முன்பாக முக்காலி ஒன்றை எடுத்துப் போட்டு உட்கார வைத்தாள்.
"அண்ணை வந்திடும் இருங்க...." என்றவள், புயலின் வேகத்துடன் வெட்டித்திரும்பி, குடிசையினுள் புகுந்து கொண்டாள்.
திடீரென இருட்டில் விட்டது போலிருந்தது அவனுக்கு. அவனைச் சூழ இருந்த ஒளியும், தூய்மையும், இளமையின் மொட மொடப்பும் அவள் கூடவே போய் விட்டதான உணர்வு அவனுள் விரவியது. முன்பின் உணராத அனுபவமாய் அது அவனுக்குத் தோன்றியது.
ஒருசில நிமிடங்கள் கழித்து, வெளியே வந்தவளது கையில் அலுமினியத்தட்டு. அதில், சுடச் சுடப் பால் அப்பம். மறுகையில் அவன் கை அலம்புவதற்கான நீர்.
"என்ன இது....!" என விழித்தவனை.
"அட சும்மா சாப்பிடுங்க..." என்றவள், சட்டென ஒரு பார்வை பார்த்தாள். அதில் இழைந்த, லேசான கண்டிப்பு அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.
பெற்றவர்களை மிக இளமை யிலேயே பறிகொடுத்து, சித்தப்பா வின் தயவில் ஆளான அவனுக்கு, இது மிகவும் பிடித்தமாய் இருந் தது. இப்படி, இந்த அளவுக்குத் தானும், அவனை அக்கறையுடன், கடிந்து கொண்ட பிறிதொரு சந்தர்ப்பத்தை அவனால் ஞாபகம் கொள்ள முடியவில்லை.
"மனசை அப்படியே ஒளிப்பேது மில்லாமல் கொட்டிக்காட்டும் இவள், அச்சொட்டாய்த் தவராசா மாதிரித்தான்", என நினைத்துக் கொண்டான்.
அவன் அப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது தவராசா வந்தான்.
"என்ன.... பாலப்பமா....? தனத்தின் கைபட்டாலே தனி ருசி...." என்று சிலாகித்தவன்; சிரித்தபடி கனகு வந்த விஷயத்தை விசாரித்தான்.
கனகு தனத்தைப் பார்த்தான்.
"என்னடா.... அவளென்ரை தங்கச்சி. உன்ரை என்ரை எண்டு ஒளிப்பு மறைப்பு ஏதுமில்லை எங்களிட்டை....சொல்லு."
கனகு வந்த விபரம் கூறினான்.
"இதுதானே.... சரி பார்க்கலாம்.... மத்தியானமிருந்து சாப்பிட்டிற்றுப் போ"
இவனால் அதனைத் தட்டமுடிய வில்லை. அன்று, அந்த வீட்டில் மதியம்வரை இருந்து, தங்கையி னதும் அண்ணனினதும் உபசர ணையில் திழைத்தான்.
கிழக்குக்கால் உசரியில் இறக்கிய கள்ளும், கோழிக்கறியும் புழுங்க லரிசிச் சோறும் சாப்பிட்ட பின்னர், ஒரு சிறு தூக்கம் வேறு போட்டு விட்டு, இவன் புறப்பட்டபோது, இவனது கைக்குள் ஒரு ஐந்நூறு ரூபாய் நோட்டைப் பொத்தியபடி வைத்தான் தவராசா.
"என்னடா இது....எனக்கு இருநூறு போதும்...."
"சரி.... சரி உனக்கு ஆகும்போது தா...."
தவராசாவிடம் விடை பெற்ற பொழுது - கனகு தனத்தைப் பார்த்தான். அவளது விழிகள் படபடப்புடன் ஏதோ சொல்லிய மாதிரி இருந்தது. எல்லாம் ஒரு கணம்தான். அடுத்தகணம் அவள் விழிகளைத் தாழ்த்தி நிலத்தைப் பார்த்தபடிக்கு உதடுகளை இறுகக் கடித்தவாறு நின்றாள்.
அவளை இன்னொரு முறை உற்றுப்பார்த்துவிட்டு இவன் திரும்பி நடந்தான்.
தவராசா அவனை பனங்கூடல் எல்லை வரை வந்து விடை தந்தான்.
அதன் பின்னர், வாரத்திற்கு இரண்டு தரமாவது சித்தங் கேணிப்பக்கம் கனகு போய் வரத்தவறவில்லை. அவனால் தனத்தைப் பார்க்காமல் இருப்ப தென்பது இயலாமலே போய் விட்டது. ஒரு சமயம் இவன் போனபொழுது தவராசா இருக்க வில்லை. தனம் தனியாக இருந்தாள். அவள் முன்பாக வந்ததும் - ஒருவகைக் கூச்சமும், இன்னது என்று சொல்ல முடியாத படபடப்பும் இவனுள் திகைந்தது. இவன் உள் ஒடுங்கி, ஒதுக்கம் கொண்டது, தனத்துக்குச் சிரிப்பூட்டியது.
குலுங்கி, கலீர் எனச் சிரித்தவள் - அவனது கரங்களைப் பற்றியபடிக்கு, "வாருங்கள் நான் ஒண்டும் உங்களை விழுங்கி விட மாட்டன்...." என்றாள்.
அவளது கண்களில் அப்பொழுது ஒளிர்ந்த குளுமை, நிதானம், உதடுகளில் அவிழ்ந்த இனிய இள நகை, எல்லாமே அவனைப் பைத்தியமாக்கின. "ஒரு முறை.... ஒரே ஒரு முறை அவளை முத்த மிடலாமா....? என நினைத்தவன், பின்னர் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான்.
நல்ல பிள்ளை என்ற பிம்பம் காப்பாற்றப்பட்டதில் அவனுக்கு உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தது. அன்று பல மணிநேரம் இருவரும் ஒன்றாகவே இருந்தார்கள். சின்னச் சின்னப் பேச்சுக்கள், சீண்டல்கள், சிணுங்கல்கள். ஆனாலும் அவர்களிடையே

குமிழிட்ட காதலை வெளியிட இருவருமே தயக்கம் கொண்டதாகவே தோன்றியது. "துணிந்த பெட்டை" என இவன் நினைத்த தனமும், இது விஷயத்தில் மௌனம் சாதித்தது, அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. பிரிய மனமில்லாமலே பேசிக கொண்டிருந்தவர்கள், நீண்ட நேரம் ஆகிவிட்டதை உணர்ந்து எழுந்து கொண்டார்கள்.

"மீண்டும் இந்தப் பக்கம் எப்ப....?" அவளது கண்கள் கேட்பது போல அவனுக்குத் தோன்றியது.

விழிகளுக்கு விடை தேடி அவன் தடுமாறியபொழுது, அவள் திடீரென அவனை நெருங்கி வந்து, அவனது கழுத்தில் தனது கரங்களை வளையமாகத் தவழவிட்டு, அவனது முகத்தைத் தனது முகத்துக்கு நேராக இழுத்து வைத்துக் கொண்டு, அவனது உதடுகளில் மென்மையாக, மிக மென்மையாக முத்தமிட்டாள்.

தனது காதலை, இவ்வளவு சுலபமாக, தயக்கமேதுமில்லாத துணிவுடன், தன்னால் அவளைப் போல உணர்த்தியிருக்கமுடியுமா - நினைத்த பொழுது அவனுக்கு வெட்கமாக இருந்தது. அவளை நிமிர்ந்து பார்ப்பதற்கே கூச்சப் பட்டவனாய் மெல்லிய தலை யசைப்பில் விடைபெற்றுக் கொண்டான்.

கனகுவுக்கும் தனத்துக்கும் இடையே முகிழ்த்த அந்த ஆழ்ந்த காதலை தவராசா உணர்ந்து கொள்ளவே செய்தான். அது பற்றிய அவனது அபிப்பிரா யத்தை அவர்கள் அறிந்து கொள்வதற்கு முன்னதாக காய்ச்சல் எனப்படுத்தவன், பிறகு எழுந்திருக்கவே இல்லை. அறிவிழந்த நிலையிலேயே அவனது ஆவி பிரிந்து விட்டது. ஏதோ புது விதமான மூளைக்காய்ச சல் என மருத்துவர்கள் அபிப்பிரா யப்பட்டார்கள்.

அவனது பிரிவால் தனமும் இவனும் இடிந்து போனார்கள். தனிமைப்பட்ட உணர்வால் தவிப்புக் கொண்டனர். உரிமை யுடன், இவன்தான் கொள்ளிக் குடம் காவி, அவனது சிதைக்கு கொள்ளி போட்டான்.

அனாதரவாகி விட்ட தனத்தை, ஊரோடு அழைத்து வருவதைத் தவிர கனகுவுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை. கொண்ட லடிப்பக்கம் வந்தவன், வைரவர் மேல் சகல பாரத்தையும் போட்டுவிட்டு, "கையிலை மடியிலை" இருந்ததையெல்லாம் போட்டு அரைப் பவுணில் தாலி செய்து, அவளது கழுத்தில் கட்டினான். பவுணில் மெல்லி யதாக கொடி செய்ய விரும்பிய பொழுதும் அவனால் முடிய வில்லை. "மஞ்சள் கயிறே மங்களமானது. இப்போதைக்கு அது போதும்...." எனத் தனம் கூறியது இவனுக்கு ஆறுதல் தருவ தாயிருந்தது.

தவராசா இல்லை என்றான பின்னர், சித்தங்கேணிப்பக்கம் சொத்து சுகம் என்று இவன் அலையவில்லை. தில்லையரும் கனடாச் சுவாத்தியம் ஒத்து வராமல் வந்துவிட்டதாக தகவல். அதை அறிந்த இவன், ஊரோடு இருந்து பிழைப்பதே உத்தமம் என நினைத்துக் கொண்டான்.

தனம் ஆதுரமாக, இளமை தருபவளாக ஒளிரும் உண்மையாக இருந்ததே அவனுக்கு போதும் போதுமென்ற நிறைவைத் தந்தது. அவர்கள் எதிர் கொண்ட சிர மங்கள் - விட்டு விலகியதுடன், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வும், மேலும் நெருக்கம் கொள்ள வும் இந்த உறவு அவர் களுக்குப் பெரிதும் உதவியது.

• • • • •

"ஆரது கனகுவா....இஞ்சை வாரும்....இந்த நொங்கு காச்சியிலும்.... மாலைதீவிலும் ஏதாவது "முத்தல் கித்தல்" கிடக்கா பாரும்"

மதியம் ஒரு மணிவரை அலைந்து திரிந்த அவனுக்கு, கூலி என ஏதோ குதிர்வது போல இருந்தது. மணியத்தாரின் மனைவி கனகம் கூப்பிட்டாள். கரும் பூதம் மாதிரி நின்றவளுடைய கண்களில் மட்டும் ஒரு இனிமையான ஒளி, லேசான கருணையும், இதமும் அதில் இணைந்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

தென்னை மரத்திலேறி முற்ற லாகப் பார்த்துக் காய்களைப் பறித்துப் போட்டான். பதினைந்து காய்கள் தேறின. இரண்டு காய்களை, தனது கூலியாக எடுத்தவனை, "இல்லைக் கனகு ஒரு காயைக் கொண்டு போ...." என்று தடுத்த மணியத்தார், அவனது கையில் ஐந்து ரூபாய்க் குற்றி ஒன்றையும் வைக்கத் தவறவில்லை.

அவனால் அதைத் தட்ட முடிய வில்லை.

"ஏன் இந்தத் தயக்கம்.... தடுமாற்றம். நியாயத்துக்குக் கூட தலை நிமிராமல், முரண்டு பண்ணாமல் அடங்கிப் போகிற ஒடுக்கம்.... இந்தத் தேங்காயும் ஐந்து ரூபாயும் எந்த மூலைக்கு, உக்கிரமாய்க் கனலும் உதரக் கொதியை இது அடக்குமா....? தன்னில் தானே கழிவிரக்கம் கொண்டவனாய் - மனமும் உடலும் சோர நடந்தவன், தன்னை மறந்த நிலையில் வீட்டுப் பக்கம் வந்து விட்டதை உணர்ந் தான்.

அடுக்களையில் ஏதோ புகைவது தெரிந்தது.

"தனம் என்ன செய்கிறாள். சமைப்பதற்கு ஒரு மணி அரிசி

தானும் வீட்டில் இல்லையே....!"
அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.
"தனம்!" என்று குரல் கொடுத்தான்.
தனம் அகமும் முகமும் மலர வெளியே வந்து, "என்ன." என்றாள். பேசும்போது கண் களைச் சுரித்து ஒரு பார்வை பார்த்தாள். இதழ் உடையாமல் சிரித்தாள். அதில் இழைந்த கனிவு இவனது களைப்பை எல்லாம் தூர விலக்கியது.
"என்ன சமையலம்மா....?"
"விருந்து...."
"விருந்தோ....?"
"ஓம்....ஓம்.... மொட்டைக்கறுப்பன் புழுங்கலிலை சோறு.... வெந்தயக் குழம்பு.... கறி முருங்கையிலை வறுவல்...."
"அடி சக்கை.... அலடின்ரை அதிசய லாம்பு ஏதாவது கிடைச் சதா....?"
"ம்... அது மாதிரித்தான்.... வாருங் களன் சொல்லிறன்."
இவன் கைகால் அலம்பிவிட்டு அடுப்படியுள் நுழைந்தான்.
"கமலாக்கா பவானி ரீச்சர் வீட்டை மா இடிக்கப் போனவா.... நீயும் வாவன் எண்டு கேட்டா. நான் தட்டேல்லை. கூடப் போனன். வேலை கொஞ்சம் கடுமைதான்.... பத்துக் கொத்தரிசி இடிச்சு வறுக்க வேணும்.... இருபது ரூபாய் கூலி.... நான் காசு வேண்டாம் அரிசி இருந்தாத் தாருங்க ரீச்சர் எண்டன். அவ நல்ல மாதிரி. முகம் கோணாமல் இரண்டரைப் பேணி அரிசி தந்தா. வெறு வயித்தில போன எனக்குப் பாண்கூட வாங்கித் தந்தா... எனக்குத்தான் தொண்டைக் குழியாலை இறங்கேல்லை. எல்லாம் உங்கடை நினைப்புத் தானப்பா...."
அவளது கண்களில் கண்ணீர்.
"விசரி என்ன இது...." என்று பதைத்தவன், எழுந்து சென்று, அவளது கண்களை ஆதரவாகத் துடைத்துவிட்டான்.
அவள் மிருதுவாக அவனை நிமிர்ந்து பார்த்தாள். அதில் காதல் ததும்பி வழிந்தது.
"உலையிலை அரிசி வேகுது.... வெந்தயக் குழம்பும் கூட்டி யாச்சு.... அடுப்பிலை வைச்சு இறக்கினதும் சாப்பிடலாம். கொஞ் சம் பொறுங்க...." என்றவள், முருங்கை இலையை இவன் பக்க மாக எடுத்துப்போட்டாள்.
"அசல் இலை.... கொஞ்சம் நல்லெண்ணைய் விட்டு பொன் வறுவலா வறுக்க வேணும்...."
அவனது பேச்சுக்கு தலைய சைப்பில் இவள் சரி சொன்னாள்.
அப்பொழுது படலை அடியில் ஏதோ அரவம் கேட்டது.
"தனம்.... பிள்ளை.... தனம்...."
கனகு வெளியே வந்து பார்த்தான்.
"தங்கச்சி அம்மா...."
"அட அவவே ....! எத்தனை நாளைக்குப் பிறகு வருகுது மனிசி.... வரச் சொல்லுங்க."
தனம் வெளியே வந்து வரவேற்றாள்.
சிறிய உருவம் வெய்யிலில் உலர்ந்து வற்றலாகி விட்ட உடல். நீர்க்காவி ஏறிப்பழுப்பு நிறங்காட் டும் துவைத்து உலர்த்திய சேலை கட்டியிருந்தாள். முகம் சிறிது வீங்கி, இரத்த சோகையின் அறிகுறிகள் காட்டின. நெற்றி நிறைந்த விபூதி. அள்ளி முடித்த நீர் சொட்டும் கூந்தலில் வெள் அலரிப் புஷ்பம்.
தனத்தைக் கண்ட மாத்திரத்தில் - தங்கச்சி அம்மாவின் கண்கள் மலர்ந்து சிரித்தன. கிழவி, இரண்டு எட்டு வேகமாக எடுத்து வைத்து வந்தாள். இவளது கரங்களை வாஞ்சையுடன் பற்றியபடிக்கு "அப்பன்.... அந்தப் பாலன்.... முருகன்ரை விபூதி பிரசாதம் பிள்ளை. பூசணை.... தம்பிக்கும் கொடும்.... நல்லூரானிட்டைப் போயிற்று உங்களையும் பாத்திட்டுப் போவம் எண்டு வந்தன்...."
இவள் பிரசாதத்தை வாங்கிப் பூசிக்கொண்டாள். கனகுவுக்கும் பூசிவிட்டாள்.
"அப்பு, உன்ரை கைராசியாக் கும்....நீ போன கிழமை தந்த ஐஞ்சு ரூபாயைத் தொட்டு, மணியத்தாற்ரை மனிசி....சிவம் பெண்டில்.... முதலாளியார் பெண்சாதி எண்டு எனக்கு நாப்பது ஐம்பது கிடைச்சதப்பு.... இப்ப முந்திப்போல ஓடி ஆடி வேலை செய்யமுடியுதே.... இல்லை ராசா.... எல்லாம் அந்த அப்பையனை நம்பித்தான் நடக்குது. "
"அட இன்னொண்டு தம்பி.... உன்ரை பேரிலைதான் இம்முறை திருப்பணிச் சிட்டை எடுத்தனான்."
அவள் மடியிலிருந்து திருப்பணித்துண்டை எடுத்து, இவனது பக்கமாக நீட்டினாள். அதில் மு. கனகசுந்தரம், திருப் பணி ரூபா ஐம்பது என்றிருந்தது.
ஆச்சி ஒரு தனிரகம். ஐந்து, பத்தென்று யார் கொடுத்தாலும், தனது எளிமையான உணவு மற்றும் தேவைகள் போக - சிலவேளைகளில் கோயில் பிரசாதமே அவளுக்குப் போது மானதாய் விடும் - மீதிப்பணத்தைச் சேமித்து, தனக்கு உதவுபவர்கள் பெயரில் திருப்பணித் துண்டு எடுத்து விடுவாள். இம்முறை கனகுவின் பெயருக்கு எடுத் திருந்தாள்.
ஆச்சியின் அன்பு கனகுவையும் தனத்தையும் உருகவைத்தது. இரு வரும் அவளை உணர்ச்சி பொங் கப் பார்த்தனர்.
"இப்படி உள்ள வாருங்க ஆச்சி...." என்று பலகை ஒன்றை

எடுத்துப் போட்ட தனம், மீளவும் அடுப்படியுள் நுழைந்தாள். தங்கச்சி அம்மா அவளைத் தொடர்ந்து வந்து, போட்ட பலகையில் உட்கார்ந்து கொண்டாள். கனகு கிணற்றடிப்பக்கம் போனான்.

அவன் குளித்து விட்டு வந்த பொழுது உணவு தயாராகி இருந்தது.

மூன்று இலைகளில் உணவைத் தனம் பரிமாறிய பொழுது கனகு அவளது காதைக் கடித்தான்:

"சோறு போதுமா....?"

"எல்லாம் போதும். பேசாமல் இருங்க...."

அவள் பதிலுக்கு முணு முணுத்தாள்.

அன்று மிகுந்த பசியுடன் இருந்த இருவரது உணவை, மூவர் பகிர்ந்து கொண்டார்கள். அதுவும் எதுவித மனத்தடைகளுமின்றி. தனம், தனக்குச் சற்றுக் குறைத்துக் கொண்டதாகவே கனகுவிற்குத் தோன்றியது.

கனகுவின் மன உளைச்சலைப் புரிந்து கொண்டவளாய், அவள்: "எல்லாம் இரவு பார்த்துக் கொள்ளலாம்...." என்று மெதுவாகச் சொன்னாள்.

கனகுவிற்கு அது திருப்தியாக இருந்தது.

சாப்பிட்டபடியே கிழவி சளசளத்துக் கொண்டிருந்தது.

"தங்கச்சிக்கு இப்ப ஆறு மாசமே. வயிறு சிறப்பமாயிருக்கு....அந்த முருகன்.... அந்தப் பாலன்தான் தங்கச்சியின்ரை வயித்திலை வந்து பிறக்கப் போறார்.... பிள்ளை ஒண்டு சொல்லிறன் கேளும்.... நான் அந்தப் பாலனிட்டை எதைக் கேட்டுக் கும்பிடுறது.... எல்லாரும் கேட்டால் அந்தக் குழந்தையாலை என்ன செய்யமுடியும் சொல்லுமன்.... அண்டைக்கு மாம்பழத் திருவிழா.... இந்த மாம்பழத்துக்குத்தானே எங்கடை பாலன் உலகத்தையே சுத்தினவர். அது அவருக்குக் கிடைக்காமல் போகிட்டுதெண்ட துக்கத்திலை எனக்குத் தொண்டையே அடைச்சுப் போட்டுது பிள்ளை.... நான் அண்டைக்கு மாம்பழம் குடுத்து அவருக்கு அர்ச்சனை செய்த பிறகுதான் மனசே ஆறுதல் பட்டதணை...."

கதை கேட்டபடிக்கு, தனம் வெத்திலைப் பெட்டியை எடுத்து கிழவிக்கு முன்பாக நகர்த்தினாள்.

"ஏது வெத்திலை....?" கனகு கேட்டான்.

"மாமா கடையிலை வாங்கினது...."

கனகுவுக்கு வாய் ஊறலெடுத்தது. அவனும் வெற்றிலை போட்டுக் கொண்டான்.

நிதானமாக வெற்றிலை போட்ட கிழவி, எழுந்து கொண்டாள்.

கனகுவும் தனமும் கூடவே எழுந்து கிழவியைப் படலை வரை வந்து வழியனுப்பினார்கள்.

கிழவி போவதையே பார்த்தபடி நின்றவர்கள் திரும்பி ஒருவரை ஒருவர் பார்த்து மௌனமாக சிரித்துக் கொண்டார்கள்.

அந்தச் சிரிப்பில் கவலைகள் கரைந்த ஒரு இதம் இருந்தது.

• • • • •

# மௌனச்சதி

*பேசாமல் பார்த்திருக்கும்*
*கல்லறை போல்*
*கல்லாய்ச் சமைந்திருக்கும்*
*இலக்கியத்தில் வித்தகரே!*

*மெத்தப் படித்தவரும்*
*பட்டங்கள் பெற்றவரும்*
*மட்டுந்தான் கலைத்துவமாய்*
*இலக்கியங்கள் படைப்பரோ?*

*பட்டறிவு மிகப் பெற்று*
*பகுத்துணர்ந்து பார்க்கவல்லார்*
*படைக்கின்ற இலக்கியங்கள்*
*பட்டியலில் சேராதோ?*

*கலைத்துவமும் கருத்துவமும்*
*சங்கமித்த கலைப்படைப்பை*
*கண்டு மனமெரிந்து*
*நெஞ்சக் குளத்தினிலே*
*அழுக்காறைப் பாயவிட்டு*
*ஊமையைப் போலிருக்கும்*
*இலக்கிய வித்தகரே!*


*பட்டங்கள் மிகப்பெற்று*
*உமக்கென்று சிற்சில*
*வட்டங்கள் போட்டவரே!*
*வட்டத்துக்கப்பாலே*
*கலைவல்லார் உளரென்றால்*
*உம் பேனா எழுதாது*
*உம் வாயோ பேசாது.*

*பேசாமல் இருந்து கொண்டு*
*பேசும் கலைப் படைப்பை*
*புதைகுழிக்குள் மூடுவதை*
*"மௌனச் சதி" என்று*
*மெள்ளச் சொல்லி வைத்தான்*
*மேலை நாட்டு ஒரு மேதை.*

**- அஸ்திரன் -**

விவாத அரங்கு

# மரபுவழி நாடகங்கள், நவீன நாடகங்கள் சில விமர்சனக் குறிப்புகள்



— தரிசனன் —

## தொழில்நுட்பவளர்ச்சியும் சமூக மாற்றங்களும்

இன்று ஒரு கல்லுடைக்கும் தொழிலாளியும் தனது குவாறியில் இருந்து கொண்டு, வானொலியில் பாடல்களைக் கேட்டு இரசித்துபடி களைப்பையும் மறந்து கல்லுடைக் கிறான். கஷ்டப்பட்டு உழைத்த பணத்தைக்கொண்டு பிடித்த சீட்டில் பெற்ற பணத்தில் ஒரு சாதாரண குடும்பம் வாங்கிய தொலைக்காட்சிப் பெட்டியில், குடிசைக்குள் இருந்தவாறே உலகத்தைப் பார்க்க முடிகிறது. குடிசைக்குள் இருந்துகொண்டு வாங்கிய தொலைக்காட்சிப் பெட்டியில் அவுஸ்திரேலியன் பட்டருக்கான கவர்ச்சிகரமான விளம்பரத்தைப் பார்த்து மயக்கமுறும் இந்தக் குடும்பத்துக்கு, விடிந்துவிட்டால் ஒரு கோப்பை தேனீருக்கும் சிலவேளை வசதியிருக்குமோ தெரியாது.

## கலைகலாச்சாரப் பரப்பில் தேசியமும் சர்வதேசியமும்

தொழில்நுட்ப வளர்ச்சியின் வீச்சு கலை இலக்கியப் பரப்பிலும் தீவிர மாற்றங்களைக்கொண்டு வந்துள்ளது. புளித்துப்போன பழமைகள் உரியப்படுகின்றன; மடமைகள் கொளுத்தப் படுகின்றன. ஆத்மார்த்த கலை கலாசாரம் சிதைக்கவும் சீரழிக்கவும் படுகின்றன. இந்த வளர்ச்சிப் போக்கானது நன்மைத்தனத்தோடு அருகரு காகவே தீமையையும் கொண்டு வந்துள்ளது.

ஐரோப்பிய மேலாண்மை நாடுகளின் கலை கலாசாரப் பண்பாட்டுக் கூறுகள், ஆசிய ஆபிரிக்க நாடுகளின் ஆத்மார்த்த கலாசார பண்பாட்டுக் கூறுக ளிலும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. நன்மைத் தனமானவை என்பதைவிட தீமையின் சுவடுகளே மிகுந்த அழுத்தம் பெறுகின்றன. தன்னினச் சேர்க்கை, தன்னினத் திருமணம் போன்றவை சட்ட ரீதியாக அங்கிகரிக்கப்படும் சில ஐரோப்பிய நாடுகளின் விரசக் கலாசாரம் காட்டுமிராண்டிகள் காலத்தில் கூட ஒரு சடங்காக அங்கிகரிக்கப்படவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளின் முட்டாக்குக் கலாசார பண்பாட்டுக் கூறுகளை உரிந்துவிட்டு, ஐரோப் பிய வகைப்பட்ட கலாசாரப் பண்பாடுகளை ஐரோப்பிய வல்லாண்மை நாடுகள் போர்த்தப் பார்க்கின்றன. தொழில் நுட்ப வளர்ச்சியின் பின்னால் மறைந் திருக்கும் வல்லாண்மை நாடுகளின் நலன்களே புதிய கலை கலாசார பண்பாட்டு மாற்றங்களுக்கு முனைப்புக் கொடுக்கின்றன. “சற்றிலைட் ரி.வி.” உலகம் தரும் அற்புதங்கள் தென்னாசியப் பிராந்தியத்துக்குள்ளும் தன் தலையை நீட்டியுள்ளது.

ஒரு தேசியத்தின் கலாசார, பண்பாட்டு விழுமியங்களைச் சிதைத்துவிட்டு ஐரோப்பிய மேலாண்மைத் தேசியம் தனது சுவடுகளை உறுதியாகப் புதைத்து வருகின்றது.

குறுகிய தேசியவாதம் எப்படித் தன் மேன்மையை இழந்து விடுகிறதோ அதுபோல் வல் லாண்மை நாடுகள் திணிக்கும் ஐரோப்பிய சர்வதேசிய வாதமும் மேன்மையை இழக்கிறது. இந்தப் பின்னடைவுகள் உலகத்தை ஒரு பொதுவான சர்வதேசியத்துள் கொண்டு வருவதற்கு இடையூறாகவே இருக்கும். ஆகவே

எந்த நவீனப் போக்கும் கலை கலாசாரமும் பண்பாடும் எமது பாரம்பரிய விழுமியங்களை அடித்துச் செல்ல அனுமதிக்கக் கூடாது. ஒரு தேசிய இனத்தின் கலைகளும், கலைவடிவங்களும், அத்தேசியத்தின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கின்றன. கலைகளையும், கலை வடிவங்களையும் கொண்டே ஒரு தேசிய இனத்தை இனங்காணலாம். எனவே மனிதப் பண்பேறிய பழமைகள் பட்டை தீட்டப்பட வேண்டும். பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். நவீன கலை வளர்ச்சியும் நோக்கும் போக்கும் எமது கலைகளின் தேசியச் சிறப்பினை அழித்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## மரபும், மரபின் சுவடுகளும்

காலங்காலமாக, வாழையடி வாழையாக வந்த சில பழக்கங்கள், வழக்கங்கள் என்பன அவசியத்திற்கேற்ப ஒரு வடிவத்தை எடுத்து, எழுதாத சட்டமாகவும் சிலவேளை எழுதிய சட்டமாகவும் அங்கிகரிக்கப் படுகிறது. இது சிலவேளைகளில் தேசவழமையின் பெயரால் சட்டமாக அங்கிகரிக்கப்படுகிறது. இப்படி அங்கிகரிக்கப்பட்ட பழக்கங்கள், வழக்கங்கள், கருத்துக்களையே நாம் மரபுகள் என்கிறோம்.

கலை இலக்கியங்களுக்குள்ளும் இந்த மரபு இடம்பிடித்துள்ளது. இது இன்னும் அழுத்தமாகவே காலைப் புதைத்துள்ளது. மரபு இருவகைப்படும். ஒன்று கருத்து மரபு. மற்றது கலை மரபு - கலை வடிவ மரபு.

"இரந்தும் உயிர்வாழ வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்"

என்ற வள்ளுவனின் வாய்மொழி தழுவி இருபதாம் நூற்றாண்டின் தேசியக் கவிஞன் பாரதி

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்று குமுறியது பழைய கருத்து மரபின் வெளிப்பாடே. அரசன் முன் கட்டியக்காரன் வருவதும், கையில் தீபமேந்தி ஆடுவதும், அரசனோடு மேடையில் திரிவதும் ஒரு கூத்து வடிவமாகக் கருதப்பட்டது. மின்விளக்கு ஒளி வெள்ளம்பாய்ச்சும் இக்காலத்தில் இத்தகைய கட்டியக்காரனும், தீப்பந்தமும் கூத்துமேடையில் தேவையற்றது.

வர்ணாச்சிரம தர்மமும், கர்மவினைக் கோட்பாடும் ஆதிக்கம் செலுத்தும் இந்திய தத்துவ ஞானத்தின் இராட்சத சுவடுகள், எமது கலை இலக்கியப் பரப்பில் தொடர்ச்சியான செல்வாக்கைச் செலுத்தி வருகிறது. மிகப்பெரும் பான்மையான கலை இலக்கியப் படைப்புகளுக்குள்ளும், பழைய இலக்கிய, புராண இதிகாசங்களுக்குள்ளும் இதன் தாக்கத்தை உணர முடியும். இந்தக் கோட்பாடு மரபு ரீதியாக வந்து கொண்டே இருக்கிறது. இது பற்றிய சர்ச்சையை இதுவரை எந்த இலக்கிய கர்த்தாக்களும், அவர்கள் முற்போக்கானவர்களாக இருந்தாலும், ஆழ்ந்த கவனத்தில் எடுக்கவில்லை. இத்தகைய (நான்குவர்ண தர்மம், கர்மவினை) கோட்பாட்டு மரபுகள் பற்றி அவர்கள் நவீனர்களாக இருந்த போதிலும் தொட்டுப் பார்க்கத் துணியவில்லை. ஆனால் தென்னாசியாவில் உலகாயுதக் கோட்பாட்டுக்காரர்களே இந்தக் கருத்து மரபை எதிர்த்து வந்திருக்கிறார்கள்.

பழைய கலை இலக்கியங்களின் அமைப்பு அல்லது வடிவ மரபுகளின்மேல் மோதுதல் தொடுக்கும் நவீன இலக்கிய கர்த்தாக்கள் என்று தங்களைக் கருதிக்கொள்பவர்கள், காலத்துக்கும், கருத்துக்கும் ஒவ்வாத பழமைக்கோட்டு மரபுகள் மேல் மோதுதல் தொடுக்காது வெற்றி கரமாகப் பின் வாங்குகிறார்கள். காலத்தின் தேவைக்கும், சமூகத்தின் அவசியத்துக்கும் ஏற்ப இந்தக் கோட்பாட்டு மரபுகளின் மேல் மோதுதல் தொடுப்பதை அவர்கள் அவசியமான ஒரு கடமையாகக் கருதுவதில்லை. இலக்கியச் செழுமை உள்ளது என்பதற்காக அரைத்த மாவையே திரும்பத்திரும்ப அரைத்துக் கொண்டிருப்பது சமூகத்தின் வளர்ச்சிக்கு உத்வேகத்தைக் கொடுக்காது. எனவே, பழைய கலை இலக்கிய மரபுகளின்மேல் மோதுதல் தொடுப்பவர்கள், பழைய கலை மரபு வடிவங்களுடன் மட்டும் இடையறாத யுத்தம் புரிந்து கொண்டிருப்பதைக் காட்டிலும், பழைய கருத்து மரபுகளின்மேல் மோதுதல் தொடுக்க வேண்டும். அதேபோல் பழைய கருத்தியல் மரபுகளுடன் கட்டுண்டு கிடப்பவர்கள் அதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். கண்மூடித்தனமான மரபு வழிபாடும், கண்மூடித்தனமான நவீன வழிபாடும் ஆரோக்கியமானதல்ல.

## வடபுலத்தில் நவீன நாடகத்தின் வளர்ச்சி

இலங்கையின் வடபுலத்தில் நவீன நாடகத்துறை வரலாற்றில்

புத்திஜீவிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கலாநிதிகள், பேராசிரியர்கள் காத்திரமான பாத்திரத்தை வகிக்கிறார்கள். நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இந்தப் புத்திஜீவிகள் வித்தகக் காய்ச்சலால் பீடிக்கப்படக் கூடியவர்கள். குழுமனவாதத்தால் முடமாகிவிடும் இந்த வர்க்கம் சமூகத்தையும் குழுமனவாதத்தால் முடமாக்கி விடுகிறது. இத்தகைய நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள்தான் வடபுலத்தில் நவீன நாடகத்தை அறிமுகப் படுத்தியவர்கள். இந்த வகையில் நவீன நாடகத்துறை வரலாற்றில் இந்த வர்க்கத்தின் கலைத்துறை சார் புத்திஜீவிகள் பெருமைக் குரியவர்கள். ஒருவனுடைய திறமைகளை - பங்களிப்பை பாராட்டுவது பெருங்குணம். மற்றவர்களின் திறமைகளை - கலைப்பங்களிப்புகளைப் பார்த்து பொருமுவதும் அவதூறு சொல்வதும் மறைப்பதும் பெருந்தன்மையன்று.

## நவீன நாடகத்தின் அனுகூலங்கள்

- பணச்செலவைக் குறைக்கிறது.
- நாடகத்தில் வேலைப்பழுவைக் குறைக்கிறது.
- சில நடிகர்களைக் கொண்டேனும் நாடகத்தை மேடை ஏற்றி விடலாம்.
- ஆடம்பரமான மேடை அமைப்பு, ஒப்பனை அவசியமில்லை.
- பார்வையாளர்களைச் சிந்திக்க வைக்கிறது.
- வசதியற்ற படைப்பாளிகள், நடிகர்கள் முதலாக தங்கள் படைப்புக்களை மேடையேற்றலாம்.

நவீன நாடகக் கலையின் இந்த அனுகூலங்கள் மறுக்க முடியாதவை. ஆனால் நவீன நாடகம் பார்வையாளர்களைச் சிந்திக்கச் செய்கிறது என நவீன நாடகத்துறையினர் மனப்பால் குடிக்கின்றனர். இவர்களின் இக்கூற்றின் உண்மையை ஆராய்வதற்கு வசதியாகச் சில கேள்விகள் அவசியமாகின்றன.

- நவீன நாடகம் எதைச் சிந்திக்க வைக்கிறது?
- நாடகத்தின் கருப்பொருளையா?
- நாடகத்தில் வரும் பாத்திரக் குறியீட்டையும் கையாளப்படும் உத்திகளையுமா?

நடந்து முடிந்த ஒரு நவீன நாடகம். அதில் ஒரு பாத்திரக் குறியீடு. அந்தப் பாத்திரக் குறியீட்டுக்குரியவர் கிறிஸ்துவா? செல்வந்தனா? மணமகனா? இவர்களில் பார்வையாளன் யாரை எடுத்துக்கொள்வது? பார்வையாளன் சிந்திக்கிறான். அவனுக்கு விளங்கவில்லை. அருகில் உள்ளவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளத் துடிக்கிறான். அத்தோடு நாடகத்தில் கையாளப்படும் உத்திகளைப் பற்றியும் சிந்திக்கிறான். இதைத்தானா நவீன நாடகம் பார்வையாளர்களைச் சிந்திக்கச் செய்கிறது என நவீன நாடகத்துறையினர் சிலாகித்துப் பேசுகின்றனர்? அப்படியாயின் நவீன நாடகம், நாடகத்தின் கருப்பொருளை சிந்திக்கத் தூண்டுவதில்லையா?

நாடகம் ஒரு செய்தியைச் சொல்கிறது. செய்தியின் சமூகப் பார்வையின் கனாகனத்தைப் பற்றிய விடயத்தை இப்போதைக்கு விட்டு விடுவோம். நாடகம் ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும் எனின் அதற்கொரு சமூகக் கடமை இருக்கிறது. இதனால் நாடகம் இரசனைக்காக, வெறும் பொழுது போக்குக்காக மட்டும் அல்ல என்பது புலப்படும். நவீன நாடகம் ஒரு பார்வையாளனை அதனுடைய கருப்பொருளை எவ்வாறு சிந்திக்க வைக்கிறது? இதில் நவீன நாடகத்துறையினருக்கே ஒரு தெளிவான விளக்கமில்லை. நவீன நாடகம் எதைச் சிந்திக்கச் செய்கிறது? பாத்திரக் குறியீட்டையும் நாடக உத்திகளையுமா?

ஒரு கனியின் தோல் கவர்ச்சிகரமாக, அழகாக இருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு, அதனையே இரசித்து, அதனையே சிந்தித்துக்கொண்டிருப்பது ஒருவித அழகியல் மனக்கோளாறுதான். கனியின் பயன்பாடு, அதாவது சத்துத்தான் அவசியமானதும் அர்த்த புஷ்டியுமானதுமாகும். நவீன நாடகம் பார்வையாளர்களைச் சிந்திக்கச் செய்கிறது என்பதையும் இந்த அர்த்தத்தில்தான் நோக்க வேண்டும். அப்போதுதான் நவீன நாடகம் எதனைச் சிந்திக்கச் செய்கிறது என்பது புலனாகும்.

## நாடகத்தில் காட்சிப்படுத்தல்

நாடகத்தில் காட்சிப்படுத்தல் ஒரு முக்கியமான அம்சம். மரபுவழி நாடகத்தில் காட்சிப்படுத்தலுக்கும், நவீன நாடகத்தில் காட்சிப்படுத்தலுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. நவீன நாடகத்தில் மேடைக்காட்சிப் படுத்தல் வளைந்து கொடுக்கக்கூடியது. மரபுவழி நாடகத்தில் காட்சிப் படுத்தல் எளிதில் வளைந்து கொடுக்கக்கூடியதல்ல. வளைந்து கொடுக்கக்கூடாது என்பது விதியுமல்ல. இருந்தும் இரண்டு நாடகத் துறைகளிலும் ஒற்றுமையும் இருக்கிறது; வேற்றுமையும் இருக்கிறது. இரண்டு நாடகத் துறைகளிலும் காட்சிப்படுத்தல் பற்றிய இரண்டு நிகழ்வுகளை உங்கள் மனக்கண்முன் நிறுத்துகிறேன்.

ஒரு நவீன நாடகம்: ஒருவர் மேடையில் துலாக்கொடி பிடித்து

தண்ணீர் இறைத்தார். கிணறு இல்லை. துலா இல்லை, துலாக் கொடி இல்லை, பட்டை இல்லை, வாய்க்கால் பீலியுமில்லை. ஆனால் அந்த நடிகன் ஒரு சரத்தை அரையில் மடித்து வரிந்து கட்டியிருந்தார். அவர் கிணற்றில் பட்டை பிடித்து இறைப்பதுபோல் நல்ல கலாபாவத்துடன் சிறப்புறச் செய்தார்.

ஒரு பார்வையாளன் என்ற வகையில் நான் அந்தக் காட்சியை இரசித்தவிதம், என்னுள் அந்தக் காட்சி ஏற்படுத்திய உணர்வு என்ன என்பதைச் சொல்ல வேண்டியது அவசியம். அந்த நடிகனுடைய அங்க அசைவும் பாவனையும் கிணற்றில் கஷ்டப்பட்டு தண்ணீர் இறைக்கும் ஒரு மனிதனை என் கண்முன் நிறுத்தியது. அந்தக் காட்சியின் சூழலைவிட அந்த நடிகனே என் கண்முன் விஸ்வரூபம் எடுத்து நின்றான். ஆனால் ஒரு கிராமப் புறச்சூழல் ஏற்படுத்தக்கூடிய மன உணர்வை அந்த நடிகனால் என்னுள் ஏற்படுத்த முடியவில்லை. மேடைக்காட்சிப்படுத்தல் முழுமைபெறாத நவீன நாடகத்தில் இதை எதிர்பார்க்கமுடியாது, இதை மிஞ்சி நவீன நாடகத்தில் எதையும் எதிர்பார்க்கவும் முடியாது. மரபுவழி நாடகத்தில்கூட இத்தகைய காட்சிப்படுத்தலை முழுமைபெறச் செய்வது அவ்வளவு இலகுவானதல்ல.

இதுபோல ஒரு மரபுவழி நாடகம்: ஒரு கிணற்றில் கப்பியில் கயிறும் வாளியும் கொண்டு ஒரு இளம் பெண் தண்ணீர் அள்ளும் காட்சி. மேடையில் கிணற்றுக்காட்சியைச் சிறப்புற அமைத்திருந்தார்கள். பெண் கப்பியில் கயிற்றை இழுத்துப் பானைக்குள் தண்ணீர் ஊற்றுகிறாள். ஊற்றப்பட்டது உண்மையான தண்ணீர்தான். இந்தக் காட்சி என்னை ஒரு கிணற்றடிச் சூழலுக்குள் கொண்டு சென்றது. இந்த இயல்புணர்ச்சி நவீன நாடகத்தில் தண்ணீர் அள்ளும் காட்சியைப் பார்த்த போது என்னுள் எழவில்லை. மேடையில் பெண்ணின் நடிப்பும் அபிநயமும் இயல்பாக, அந்தக் காட்சிப்படுத்தல் சூழலால் செழுமைப் படுத்தப்பட்டிருந்தது.

நாடகத்தில் காட்சிப்படுத்தலின் சிறப்பம்சம் இதுவாகும். நவீன நாடகத்தில் சூழலை விட நடிகனே முதன்மை பெறுகிறான். மரபுவழி நாடகத்தில் சூழலோடு மனிதன் இணைவதால் அக்காட்சி முழுமை பெறுகிறது.

மரபுவழி நாடகத்தில் காட்சிப் படுத்தல் பார்வையாளனைக் குழப்பிவிடுகிறது என்று நவீன நாடகத்துறையினர் கூறுகின்றனர். மேடையில் பெண் கிணற்றிலிருந்து வாளியால் தண்ணீர் அள்ளிப் பானைக்குள் ஊற்றும்போது பார்வையாளர்கள் சீழ்க்கை அடித்துக் கரகோசம் செய்கிறார்கள். இதனால் பார்வையாளர்கள் குழப்பப்பட்டு அந்தக் காட்சியின் ஏனைய அம்சங்களைக் கவனிக்க முடியாமல் போய் விடுகிறது என்ற கவலையை நவீன நாடகத்துறையினர் மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கின்றனர். இவர்கள் பார்வையாளர்களை மிகவும் மட்டரகமானவர்கள் என்று கருதுகிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

அப்படிப் பார்க்கின், நவீன நாடகத்தில்தான் பாத்திரக் குறியீடு களையும், பயன்படுத்தும் உத்தி களையும் பார்த்துச் சிந்தித்தவாறே ஒரு பார்வையாளன் அந்த நாடகத்தின் ஏனைய காட்சிகளையும் கருத்தூன்றாமல் இருக்கச் செய்கிறது. அல்லது அடுத்த காட்சியிலும் என்ன குறியீடு, என்ன உத்தி வருகிறதோவென்று குறியீடுகளையும் உத்திகளையும் நினைத்தவாறே நாடகத்தைப் பார்க்கச் செய்கிறது. ஒரு காட்சியைப் பார்க்கும்போது இன்னொன்றைப் பற்றிச் சிந்தித்துக்கொள்ள வைக்கிறது - அல்லது தூண்டுகிறது.

நவீன நாடகத்தில் ஜதார்த்தம் என்ற பெயரில் கொச்சைத்தனமான வார்த்தைகளைப் பயன்படுத்தி பார்வையாளர்களை விசிலடிக்கவும் கூச்சல் போட்டுச் சிரிக்கச் செய்வதும், நாடகம் முடிந்ததும் அந்தக் கொச்சைத்தனமான வார்த்தையையே பார்வையாளர்கள் உச்சரித்துக்கொண்டு கேலி செய்வதும், நாடகத்தின் கருப்பொருளோடு அவர்களை ஓட்டச் செய்யுமா? எனவேதான் நவீன நாடகம் பார்வையாளர்களைச் சிந்திக்கச் செய்கிறது என்பதன் அர்த்தம் புரியாமல் பேசும் நவீன நாடகத்துறையினர் தங்கள் கண்ணிலுள்ள விட்டத்தை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

## குழுமனவாதமும் கலைத்துறை வீழ்ச்சியும்

எந்தக்கலை வடிவமானாலும் அது கலைத்துவம் மிக்கதாகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு கலை வடிவத்தின் சிறப்பம்சம் ஏற்கப்பட்டு, மேலான நிலையை நோக்கி அதை வளர்க்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக, நடுத்தர வர்க்கப் புத்திஜீவிகள் குழுமனவாதத்தினால் பாதிக்கப்பட்டு, குத்தகை எடுத்தவர் மனப்பான்மையோடு தமிழ் நாடகக் கலைக்கான ஒரு பொதுவான வடிவத்தை இனங்காணவும் படைக்கவும் திராணியற்றவர்களாக இருப்பதோடு, பிரதேச

வாதம், மதவாதம், சாதிவாதம், வித்தகவாதம் போன்ற நோய்களாலும் முடமாக்கப்பட்டு, முகம் சிதைந்து உள்ளார்கள். இவர்களது முகங்கள் கலை முகங்கள் அல்ல. கோணல் மாணலாய் உப்பியும், ஒட்டியும் உள்ள முகங்கள். பிரமாண்டமான தயாரிப்புகளை எம்மால்தான் சாதிக்கமுடியும் என்று யாராவது கருதினால் அது எப்படி ஆன்மீகக் குறைபாடானதோ, அவ்வாறு நாங்கள்தான் நவீன நாடகத்தின் சொந்தக்காரர்கள் என்பதும் ஆன்மீக குறைபாடுதான்.

எமது மரபுவழிபட்ட கூத்துக்களின் வடிவங்களிலிருந்து தமிழ்த்தேசிய இனத்துக்கான பொதுவான ஒருகூத்து வடிவத்தை நோக்கிய தேடல் இன்றைய காலகட்டத்தின் அவசியமாகும். மரபுவழிபட்ட கூத்துக்களின் வடிவங்களிலிருந்து தமிழ்த் தேசிய இனத்துக்கான ஒரு பொதுவான கூத்து வடிவம் இனங்காணப்பட வேண்டும். இதனைச் சகல கலை இலக்கிய கர்த்தாக்களும், ஆர்வலர்களும், கல்விமான்களும் ஒன்றுபட்டுத் தேடல் வேண்டும். அத்தகைய தமிழ்க்கலைஞர்கள் எங்கு இருந்தாலென்ன, அத்தகையவர்களின் அரிய கருத்துக்களை நாம் ஏற்பதில் எந்தத்தவறும் இருக்க முடியாது. மண்ணைத் தொட்டு அழைந்துகொண்டு இருப்பவர்கள்தான் கருத்துக்களைக் கூறமுடியும் என்றால், ஐரோப்பாவில் உள்ள அறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், ஞானிகளின் கருத்துக்களையும் நாம் நிராகரிக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டு விடுமல்லவா? தமிழ் தேசிய இனத்தின் கூத்துக் கலை பற்றிய பொதுவான வடிவத்தை நோக்கிய தேடலுக்கு யார் வேண்டுமானாலும் அரிய கருத்துரைகளை வழங்கலாம். நாம் அப்படியான கருத்துக்களை அங்கீகரிக்கும்போது எமது மேதாவிலாசத்திற்குச் சில வேளை பெயர்கிடைக்காமல் போனாலும், எமது தேசியக் கலையின் வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக அமையுமானால் அதையிட்டு நாம் பெருமைப்படலாமல்லவா? மெய்ப்பொருள் காண்பது தானே நுண்ணறிவு.

குழுமனவாதம், வித்தகத்தனம் இவைகளால் ஒரு தேசிய இனத்தின் கலைத்துறை வளர்ச்சி பின்னடையக் கூடாது. இதற்கு இடமளிக்கவும் கூடாது. குழுநலமா? தேசியத்தின் நலமா? எது எதிர்காலத்தில் ஒரு தேசிய இனத்தின் நலன்களை நிர்ணயம் செய்யும் என்பதைக் கருத்திற்கொண்டு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். ஆக்கபூர்வமான விமர்சனம் ஜனரஞ்சகமாக்கப்படுவதன் மூலம் உண்மையினை மக்கள் இனங்காணச் செய்ய வேண்டும். அடித்து வீழ்த்துவதால் யாரையும் எழுப்பிவிட முடியாது.

## இலக்கிய இருட்டடிப்பு.

தங்களுடைய மேதாவித்தனமான வட்டத்துக்குள் இருந்துகொண்டு கவிஞர்களை, கலைஞர்களை, எழுத்தாளர்களைத் தேடுகின்ற ஒரு கிறுக்குக் குணம் எமது மெத்தப் படித்த மட்டங்களைக் கௌவிக் கொண்டுள்ளது.

மெக்காவிலும், லூாத்துகெபியிலும், காசியிலும், புத்தகாயாவிலும் மிதித்துவிட்டால் தனது பாவம் தீர்ந்து புனிதப்பட்டுவிடுவேன் என்று கருதும் ஒரு பக்தனைப்' போல் வளாகத்து 'வளவுக்குள் மிதித்து விட்டாலே அறியாமையும் பலவீனமும் நீங்கி மேதைகள் ஆகிவிடலாம் என்று மயங்கிக் கிடப்பவர்களும் எம்மத்தியில் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள் தங்கள் வட்டத்துக்கப்பால், இலக்கிய தரங்களைப் பற்றியோ, கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் பற்றியோ கணக்கில் எடுப்பதில்லை. தங்களுடைய மேதாவிலாசம் எங்கே எடுபடாமல் போய்விடுமோ" என்று இவர்கள் அஞ்சுகிறார்கள் போலும். தரமான கலைப்படைப்புக்களைக் கண்ணாரக் கண்டு விட்டும் மிகவும் மௌன விரதம் அனுஷ்டித்தே அந்தக் கலைப்படைப்பை நசுக்கிவிடும் கைங்கரியத்தைச் செய்கிறார்கள். இத்தகையோர் தங்களது வட்டத்துக்குள் இருப்பவர்களின் கலைப் படைப்புக்களில் இல்லாத அம்சங்களைக் கூட இருப்பதுபோல் பாராட்டி எழுதுவார்கள். பறைசாற்றுவார்கள். தங்களுடைய வட்டத்துக்கப்பால் இருப்பவர்களின் கலைப்படைப்புக்களின் நல்ல அம்சங்களைக்கூட இவர்கள் பேசுவதுமில்லை; எழுதுவதுமில்லை.

நான் மெக்காவுக்கு, லூர்த்து கெபிக்கு, காசிக்கு, புத்தகாயவுக்குச் சென்றவன் என்று அடிக்கடி சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் ஒருவனைப்போல, புத்திஜீவிகள் மட்டத்தில் நிற்கிறேன் என்று பெருமையடித்துக்கொள்வதும், ஒரு சில வட்டங்களுக்குள் செல்வதே வாழ்க்கையின் பெறற்கரிய பேறாகக் கருதி, அங்கிருந்து தான் வாழ்க்கையின் உன்னதங்களையும், கலைநுட்பங்களையும் கண்டறிந்து கடைத்தேற முடியும் என்று கருதும் பாமரத்தனம் சான்றோர்களிடம் எழுவதில்லை. சான்றோர்கள் தங்களைத் தாழ்த்திக்கொள்ளுகிறார்கள். பெருமை பாராட்டுவதில்லை.

# திரு மறைக்கலாமன்றம்
## CENTRE FOR PERFORMING ARTS

**இலக்கிய விழா**
**1993 ஜூன் 25,26,27**



**238, பிரதானவீதி, யாழ்ப்பாணம்**

**பேரன்புடையீர்,**

நிகழும் 1993 ஜூன் திங்கள் 25, 26, 27ம் நாட்களில் தினமும் மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும் எமது இலக்கிய விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்
(இயக்குனர்)

## 27-06-93 நிகழ்ச்சிகள்

அரங்கு:
**கவிதையும் கருத்தும்**

**தமிழ்த்தாய் வாழ்த்து:**
இசைத்தென்றல்
திரு எம். யேசுதாஸ்
(செயற்குழு உறுப்பினர்)

**வரவேற்பு நடனம்:**
கவின்கலைகள் பயிலகம்,
திருமறைக்கலாமன்றம்

**வரவேற்புரை:**
திரு வி. ஜே. கொன்ஸ்ரன்ரைன்
(பொதுச் செயலாளர்)

**தலைமையுரை:**
பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்
(இயக்குனர்)

**கவியின்பம்:**
வாகரைவாணன்
*"நெஞ்சு பொறுக்குதில்லையே"*
திரு சோ. பத்மநாதன், B. A. (Hons)
*"வடக்கிருத்தல்"*
கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை
*"என்று தணியும்"*

**சிறப்பு நிகழ்ச்சி:**
பேராசிரியர் **கா. சிவத்தம்பி** அவர்களின்
இலக்கியப் பணியைப் பாராட்டி
திருமறைக்கலாமன்றத்தின் சார்பாக
மேதகு ஆயர்
கலாநிதி **வ. தீயோகுப்பிள்ளை** ஆண்டகை அவர்கள்
பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கும் வைபவம்

**பாராட்டுரை:**
பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார்
(இயக்குனர்)

**ஆசியுரை:**
மேதகு ஆயர்
கலாநிதி **வ. தீயோகுப்பிள்ளை** ஆண்டகை

**புகழாரம்:**
எஸ். ஏ. அழகராஜா

**கருத்தரங்கம்:**
விடயம்: *"தமிழிலக்கியத்தில் சமரசம்"*

**தலைமையுரை:**
பேராசிரியர் **கா. சிவத்தம்பி** அவர்கள்

**பங்குபற்றுவோர்:**
கலாநிதி எஸ். ஜே. வி. சந்திரகாந்தன் அடிகள்
(தலைவர், கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத்துறை)
கலாநிதி சோ. கிருஷ்ணராஜா,
(தலைவர், மெய்யியல் துறை)

**நயவுரை:** தலைவர்

**நன்றியுரை:**
திரு சி. எம். நெல்சன் (செயலாளர்)


**கலை நிகழ்ச்சி:**
*"இலங்கையர்கோன் விலங்கு"*
(நடன நாடகம்)
(கவின்கலைகள் பயிலகம், திருமறைக் கலாமன்றம்)

**அனைவரும் வருக! இலக்கிய இன்பம் பெறுக!**

# திரு மறைக்கலாமன்றம்

நடாத்தும்

# "இசை விழா"



**18, 19, 20 ஜூன் 1993**

மாலை 5:30 மணி தொடக்கம் 9:45 மணிவரை

விழாவில் கலந்துகொள்ளும் முன்னணிக் கலைஞர்கள்

**1ஆம் நாள் (18-6-93) வெள்ளி**

திருமதி மேரி சரோஜா ஜஸ்ரின் - இசைக் கச்சேரி

திரு உ. இராதாகிருஷ்ணன் - வயலின் இசை

திரு எஸ். கணபதிப்பிள்ளை - இசைக் கச்சேரி

**2ஆம் நாள் (19-6-93) சனி**

பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா - இசைச் சொற்பொழிவு

திரு எஸ். குமாரசாமி - இசைக் கச்சேரி

திருமதி நந்தினி விஜயரட்ணம் - வீணை இசை

திரு பொன். சுந்தரலிங்கம் - இசைக் கச்சேரி

**3ஆம் நாள் (20-6-93) ஞாயிறு**

திரு எஸ். பாலசிங்கம் - இசைக் கச்சேரி

திரு எஸ். பத்மலிங்கம் - இசைக் கச்சேரி

திரு வி. கே. கானமூர்த்தி

திரு வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினர் - நாதஸ்வர இசை

**சிறப்புநிகழ்ச்சியாக**

சங்கீத பூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள்

பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பெறுவார்கள்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**நிர்வாகத்தினர்**

**திருமறைக்கலாமன்றம்**

**238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**



# காதலாகின்றேன்

நெய்தல் நிலத்தில்
வெய்யில் குளிக்கின்ற
செந்நிறத்துப் பட்டிப்பூவே!
களைத்து இளைத்தவென்
கனத்த இதயத்தில்
ஜீவக் கனல் மூட்டுமுந்தன்
புன்னகையில் மெய்மறந்தேன்.

சின்னவள் உனக்குக்கூட
சிங்கார வதனம் தந்த
சித்து விளையாட்டின்
உத்தமச் செல்வியே!
ஏழைக் கவிஞன் யான்
உன்மீது காதலாகிறேன்

- சுந்தரன் -




## இசைவிழாவில்
20/06/93.

## பிழை திருத்தம்

கலைமுகம், சித்திரை-ஆனி 1993ன் இதழில் 16ம்பக்கத்தில் உள்ள "பவளக்கொடி கூத்திலிருந்து" என்ற சொற்றொடர் 17ம் பக்கத்தில் உள்ள "கண்ணகி வழக்குரை கூத்திலிருந்து" என்ற இடத்திலும், 17ம் பக்கத்திலுள்ள "கண்ணகி வழக்குரை கூத்திலிருந்து" என்ற சொற்றொடர் 16ம் பக்கத்திலுள்ள "பவளக்கொடி கூத்திலிருந்து" என்ற இடத்திலும் மாற்றப்பட வேண்டும்.

# நீங்காத நிழல்கள்



சித்திரக்கண்காட்சி

28 - 29/05/93.

கலைமுகம்,
அறிமுகம். 25/6/93.



இலக்கியவிழாவில் 25 - 26 - 27./06/93.



வரவேற்பு நடனம்
கவின்கலைகள் பயிலகம்
திருமறைக்கலாமன்றம்

நீதி சாத்தான் கூத்து
26/06/93.
நாடகப் பயிலகம்
திருமறைக்கலாமன்றம்



ஔவையார்
இலக்கிய நாடகம்
நாடகப்பகுதி
திருமறைக்கலாமன்றம்.
25/06/93.



இலங்கையர்கோன் விளக்கு நடனநாடகம்
கவின்கலைகள் பயிலகம்
திருமறைக்கலாமன்றம். 27/06/93






இலக்கிய விழாவில்
25, 26,
27/06/93.






# இசைவிழாவில்













http://www.thamizham.net



**நவீன நாடகத்துக்கும் உங்களது மன்றத்துக்கும் வெகுதூரம் என்று ஒரு சிலர் கருதுகிறார்கள். இதற்கு உங்களின் தனிப்பட்ட கருத்து என்ன?**

இன்று நாடக உலகில் "சமகால நிகழ்வு" "நவீனம்" என்றெல்லாம் அதிகம் பேசப்படுகின்றது. இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் புறம் 279, 278 எனும் மௌன, ஆனால் புதுமையான நாடகத்தை அரங்கேற்றி சமகால நிகழ்வை மட்டுமல்ல, சமகால உணர்வையும் நமது மன்றம் காட்டி வைத்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த வீர காவியத்திற்கு உயிர் கொடுத்தது. இன்று நவீன நாடகம் ஒன்றிற்கு கூப்பாடு போட்டவர்கள் அன்று மெய்மறந்து நாடகத்துடன் ஒன்றித்துப் போனதை நான் மறக்கவில்லை. நாடகத்தில் நவீனம் என்ற பதம் பார்வையாளருக்கு இன்னும் ஒருவித மயக்கத்தையே தருகிறது. தாமே தமக்கென நாடகத்திற்கு ஒரு இலக்கணம் வகுத்துக் கொண்டு இதுதான் நவீனம் என்பாரும், ஏவுகணை வேகத்தில் மாறிக் கொண்டு போகும் மேல் நாட்டு நாடக உலகை நேரடியாகப் பார்த்து அனுபவியாமல், மேற்குலக நாடக நூல்களின் கோட்பாடுகளை வலிந்து புகுத்தி இதுதான் நவீனம் என்பாரும் மலிந்து விட்ட காலமிதுபோல் தோன்றுகிறது. கூத்துக்கலையை நவீனப்படுத்தினார் என்று, அன்று வித்தியானந்தனைப் புகழ்ந்தவர்கள், மௌன குரு அதை மாற்றியமைத்த பொழுது, "ஆகா இதுதான் புரட்சிகர நவீன பாணி" என வாயாரப் புகழ்ந்தார்கள்; ஆனால் இப்பொழுதோ அந்த இருவரும், மன்றங்களும் நகரத்து மேடையிலே நாட்டுக்கூத்தை நாசமாக்குகிறார்கள்(கிறது) என்று கருத்து மோதலில் உரக்கக் கத்துகிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் இந்தப் புதிய நவீன கர்த்தாக்களின் நாடக நெறியை மாற்றியமைத்து இதுதான் நவீனம் எனக் கூறும் புதிய புத்தி ஜீவிகளின் குரல் ஒலிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

**கிராமியக் கலையைக் கிராமங்களில் விட்டு விடுவதுதான் நன்று என்றும், ஏன் அவற்றைப் பல்கலைக்கழக மட்டத்தில் சரி, கலா மன்றங்கள் மட்டத்தில் சரி கொண்டு செல்லத் தேவையில்லை என்று கருதப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து?**

கிராமத்தில் இருந்து நகரத்திற்கும், பல்கலைக்கழக மேடைக்கும் கிராமிய கலை வடிவங்களாகிய கூத்து வரவேற்கப் பட்டமையின் காரணமாகவே கிராமத்தில் அதன் மதிப்பு மென்மேலும் உயர்ந்தது? கிராமங்கள் இன்று வேகமாக நகரங்களாக மாறுகின்றன. சமுதாய மாற்றங்களும், சாதிமுறை ஒழிப்பும் இவ்விதமான கிராமியக் கலை வடிவங்கள் அழிந்து போவதற்குக் காலாக இருந்த வேளையில் நகரத்து மன்றங்களும், பல்கலைக் கழகங்களும் அதற்குப் புத்துயிர் கொடுத்தன எனலாம். இன்றேல் "மேளக்கூத்து", "விலாச நாடகங்கள்" "பள்ளு நாடகங்கள்", அழிந்தது போல் "காத்தான் கூத்து" போன்ற கிராமிய கலை வடிவங்கள் மதிப்பற்ற நிலைக்குத் தள்ளப் பட்டு எப்பொழுதோ மறைந்து போயிருக்கும். "வசந்தன் கூத்தின்" வரலாறும் இதற்கு இன்னொரு எடுத்துக் காட்டாகும். இன்று எமது பாரம்பரிய கலை என்று



**திருமறைக் கலாமன்றத்தின் பன்முகப்பட்ட முப்பத்து நான்கு பிரிவுகளுள் ஒன்றுதான் நாடகப்பிரிவு. மன்றம் மேடையேற்றும் நாடகங்களைப்பற்றிப் பல விதமாக விமர்சிக்கப் படுகிறது. "இரண்டும் கெட்டான் நிலை" என மன்ற நாடகங்களை இரண்டு வட்டங்களை மாத்திரம் காணக்கூடிய ஒரு விமர்சகர் கண்டித்திருக்கிறார். அவர் தமது கருத்துக்களை மன்றத்தின் கேட்போர் கூடத்தில் சமர்ப்பிக்கும்படி அழைக்கப்பட்டார். அதற்கு அவர் உடன்படவில்லை. அந்நிலையில் மன்றத்தின் பொதுசனத் தொடர்பாளர், என். எஸ். ஜெயசிங்கத்தை அணுகி நாடகத்தைப்பற்றிய அவரின் தனிப்பட்ட கருத்துக்களைக் கேட்டறிந்தோம். அவருடன் நடத்திய உரையாடலில் ஒரு பகுதி இதோ!**

நேர்கண்டவர்: புஸ்பராஜன்

மகிழ்வதற்கும், அதனை ஆய்வு செய்வதற்கும், நகரத்து மேடைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இக்கூத்து வடிவங்கள் அரங்கேற்றப்பட்டமையே காரணமாகும். ஜப்பான் நாட்டின் கிராமிய நடனங்கள் ரோக்கியோவின் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் காண்பிக்கப்படுவதால் அதன் பெருமை, பண்பு குறந்ததாக அவர்கள் கருதவில்லை. எனவே எமது கிராமியக் கலை வடிவங்களை கிராமங்களிலேயே விட்டு விடுதல் நன்று என்று கூறுவது காலத்திற்குப் பொருந்தாத கூற்றாகும்.

**நாடக இலக்கணத்துக்கப்பாலே நீங்கள் செல்கிறீர்கள் என்று ஒரு சிலர் கருதுகிறார்கள். சினிமாப் போக்கைப் புகுத்துகிறீர்கள் என்கிறார்கள். இதற்கு நீங்கள் ஏதாவது பதில் அளிக்க முடியுமா?**

இன்று புதிதாக நாடக உலகில் புகுந்த ஒரு சில புத்திஜீவிகள் எனப்படுவோர் கருதுவதுபோல் திருமறைக் கலாமன்ற நாடக உலகம் இவர்களது கோட்பாடுகளுக்குள் அடங்காத (இரண்டும் கெட்டான்) ஒரு வேறுபட்ட தனித்துவ நிலையில் நிற்கின்றது என்பது உண்மையேதான். எது விரும்பத்தக்கது என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். எனது கருத்துப்படி மக்களுக்காகவே நாடகம், நாடகத்திற்காக மக்களல்ல. மரபு வழி வந்த நாடகமாக இருந்தால் என்ன, மக்கள் விரும்புகின்ற, இரசிக்கின்ற, விளங்கிக் கொள்ளக்கூடிய, பரவசப் படுகின்ற, நவரச உணர்வோடு நாடகத்தை வழங்கி வருபவர்கள் திருமறைக் கலாமன்றத்தினர். இலக்கணத்திற்காக நாடகமல்ல நாடகத்திற்காகவே இலக்கணம் என்று பதிலும், மக்கள் விரும்புவதே மரபாக மாறுகின்றது என்பதிலும், எதையும் பிரச்சார நோக்கத்தோடு மக்களின் குரல் வளைக்குள் திணிக்க விரும்பாதவர்கள் திருமறைக் கலாமன்றத்தினர் என நான் எண்ணுகிறேன். நாடகத்திற்கு இலக்கணம் வகுக்கப் புகுந்த பரிதிமாக் கலைஞனின் "நாடகவியல்" இன்று தேடுவாரற்றுக் கிடப்பதை தமிழ் நாடக உலகம் நன்கு அறியும். நவீனம், புதிய அலை, புதுமோடி என எழுந்த நாடகங்கள் ஏட்டில் மட்டும்தான் இன்று காணுகின்ற நிலையில் இருக்க "மயான காண்டம்" "ஞானசவுந்தரி" "காத்தவராயன்" போன்ற நாடகங்களை ஆண்டாண்டு காலமாகியும் சலிக்காது, மறக்காது மக்கள் கூட்டம் மகிழ்ந்து பார்க்கின்றமைக்கான காரணத்தை நாம் அறிய வேண்டும், ஆராய வேண்டும். அவை காலத்தால் அழியாத, எக்காலத்திற்கும், எக்கொள்கையினருக்கும், எந்த நாட்டினருக்கும் பொருந்தக்கூடிய ஒரு கருவை மையமாக வைத்து உருவாக்கப்பட்டிருக்கின்றன. சேக்ஸ்பியருடைய நாடகங்களும் இவ்வாறு காலத்தை, எல்லையை கடந்து எவரும், எப்பொழுதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தை கொண்டிருப்பதால்தான் இன்று வரை அவை வாழ்கின்றன.

இன்றுபோல் ஒரு பள்ளிக்கூடத்தினது மாணவ, பெற்றோர், ஆசிரியர்களின் மன நிலைக்கும், அந்தஸ்திற்கும் மட்டும் உருவாகும் "மொட்" நாடகங்கள் அல்ல அவை. அங்கே பல்சுவையும் பெருக்கெடுத் தோடுகின்றது, படித்தவர், பாமரர் அனைவரும் பார்த்து மகிழக் கூடியதாக நவரசங்களும் மலிந்து கிடக்கின்றமையே காரணமாகும். நாடகத்தை நான் ஒரு விருந்தாகவே கருதுகின்றேன். ஆனால் சிலர் அதை பசியைப் போக்கும் ஒரு உணவாக மட்டும் கருதுகின்றார்கள். வெறும் சாதமும் சம்பலும் பசியை போக்கும்தான், ஆனால் அந்த சாதத்துடன் பல்வேறு கறி வகையும்,

பாலும், தேனும், பாகும், பருப்பும், பாயாசமும் கலந்த ஒரு பெரு விருந்தை நாம் கொடுத்தால் எம்மை திட்டுகிறார்கள். மற்ற வர்கள் இப்படி மக்களைத் திருப் திப்படுத்த முடியாதே என்று விரக்தியின் விளிம்பில் நின்று புழுதி வாரிக் கொட்டுகிறார்கள். இவர்கள் களப்பிரர் காலத்தை நினைவுக்குக் கொண்டு வருகின றார்கள். இவ்வாறுதான் அன்று களப்பிரர் படையெடுப்பால் தமிழ் நாடக இலக்கிய உலகம் சீர்கேட டைந்தது, வரட்சி நிலைக்குள் ளானது. ஆடலும், பாடலும், காதலும் கைவிடப்பட்டு அன்றய நாடக இலக்கியம் மந்த நிலைக்குள் ளானது. இன்று இங்கும் அதே நிலை. எல்லையிலே போர்மேகம், அதனால் நாட்டிலே வறுமை; பொருளாதார நெருக்கடி; மனதிலோ வேதனை; இவற்றின் தாக்கம் நாடக அரங்கினை வரட்சியாக்கி விடக் கூடாது என்று நான் நினைக்கிறேன். அதனையே செயலில் காட்டுகிறது நமது மன்றம். இன்றைய வேதனையை யும், துன்பத்தையும், அவலத்தை யும் சமகால நிகழ்வுகள் என்று அரங்கினில் காட்டுவோர் அதற் குப் பரிகாரத்தையும் ஆற்றுகையில் காட்ட முற்படுவதில்லை, அல்லது காட்ட முடியாமையோ தெரியவில்லை. ஒரு நாடகத்தின் முடிவில் நாடக ஆசிரியனுடைய எண்ணம், பரிகாரம், கொள்கை பிரதிபலிக்க வேண்டுமென விரும் பும் பார்வையாளர் பலர் இன்று ஏமாற்றமே அடைகின்றனர். இன்றைய நிகழ்வை காட்டும் ஆற்றுகையைக் காட்டிவிட்டால் மாத்திரம் நாடகமாகாது என்றே நான் நினைக்கின்றேன். அதை இவ்வாறு மாற்றியமைக்கலாம் என்ற நிகழ்வையும் காட்டவேண் டும். அப்படி முடியாவிட்டால் அத்தகைய ஒரு நாடக ஆற்றுகை யால் பலனே இல்லை. நாடகத்தின் பணி வாழ்க்கையை வெளிப்படுத்துவதும், வாழ்வுக்கு வழிகாட்டுவதுமே என்று கருதப் படுமானால், இறுதியான வழிகாட்டும் ஆற்றுகை இன்றைய நாடகங்களில் பூச்சியமாகவே இருக்கின்றது என்பது எனது கருத்து. அறிவூட்டலும் மகிழ்வளித் தலும் நாடகத்தின் அடிப்படை நோக்கங்கள் எனின் இன்றைய பெரும்பாலான நவீன நாடகங் களில் மகிழ்வளித்தலுக்குப் பதில் மன விரக்கியோடும், விளங்காத் தன்மையோடும் வெளியேற வேண்டியிருக்கின்றது.

இவ்விடயத்தில் திருமறைக்கலா மன்றம் சற்று வேறுபட்டு நிற்கிறது. வேதனையும், விரக்தியும் நெருக்கடியும், எமது நாடக அரங் கினை வரட்சியாக்கி விடக்கூடாது எனக் கருதுகிறோம். அதனையே செயலில் காட்டுகிறோம். எமது ஒளி, ஒலி, ஆடை அலங்காரம், அரங்கமைப்பு, நவீன இசைக் கருவிகளின் பாவனை என்பன ஒரு சில நாடக விற்பன்னர்களுக்கு அதிருப்தியைக் கொடுக்கிறது. இறைச்சிக் கறியைக் கண்ட பிச்சைக்காரனைப்போல் அவர் கள் அங்கலாய்க்கின்றனர்.

இன்று மேல் நாட்டில் "மிஸ் சைக்கோன்" எனும் இசை நாடகத்தில் உலங்கு வானூர்தியே மேடையில் இறங்குகின்றதாம். இன்னுமொரு நாடகத்தில் பூமி நடுக்கம் ஏற்படுவது போன்ற தொரு காட்சியில் பார்வையாளரின் இருக்கைகள் நடுங்குவது போன்ற தொரு நிலை. அந்த அளவுக்கு மக்களைப் பரவசப்படுத்த விரும்புகின்றார்கள். எம்மால் அவ்வாறு முடியாவிட்டால் அவை நாடகமல்ல என்று கூறலாமா? அகத்தா கிறிஸ்ரியின் "எலிப் பொறி" எனும் நாடகம் தொடர்ந்து பல வருடங்கள் நடை பெற்றுக் கொண்டேயிருக்கின்றது என்றால், அது மக்கள் மனதைக் கவர்ந்ததே காரணம்.இன்று இங்கு கூத்தும், பரதமும், கதகளியும், தேவாரமும் திருவாசகமும் கலந்த ஒரு அரங்கின் ஆற்றுகை "நவீன" மாகிறது. தலையிலே ஒரு கிரீடம் வைத்து விட்டால் (குறியீடு) கதர் ஆடையும் கால்முழத்துண்டும் கட்டிவரும் மகாத்மா காந்தி கூட மன்னனாகிவிட்டார் என்று பார்வையாளர் நினைக்க வேண் டும் என்று சில சமயங்களில் கட்டாயப்படுத்துகிறது (நவீனம்). நான் இவற்றை வரவேற்கிறேன். ஆனால் நாடகத்தில் இடி முழக்கத் திற்கும், மின்னலுக்கும், பாடலுக் கும் ஆடலுக்கும் ஒளியமைப்புக்கும் அதி நவீன சாதனங்களை அறி முகப்படுத்தினால் பார்வையாளர் பரவசப்பட்டு மகிழ்கிறார்களோ என்னவோ, அதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பணியில் நாடகத்துறை ஒரு சிறு பகுதி. இதுவரை இசை நாடகம், இலக்கியநாடகம், பக்தி நாடகம், நடன நாடகம், மௌன நாடகம், நவீன சமூக நாடகம் என்ற வகையில் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளோம். நாடக இலக்கணத்தோடு மட்டுமன்றி கலைக்கண்ணோடும், அழகியல் உணர்வோடும் கண்டு களித்த பல தரப்பட்டவர்களின் நல்ல விமர்சனங்களை பெற்றவர்கள் என்ற மட்டில் திருப்தியடை கிறோம்.

**கவிதையென்பது ஓர் அனுபவம் மட்டுமல்ல. சிந்தனை, உணர்ச்சி, அழகியல் வெளிப்பாடு. சிந்தனை எவ்வளவு ஆழமானதோ, உணர்ச்சி எவ்வளவு வேகமானதோ, அழகியல் எவ்வளவு செழுமையானதோ அவ்வளவிற்கு அது காத்திரமானது. - தோமஸ் டிகென்ஸ்**

# 83 இன் பின்னர் ஈழத்தமிழ்ச் சிறுகதையின் போக்கு

- கோகிலா மகேந்திரன் -

**1993ம் ஆண்டு யூன் 26ம் திகதி நடைபெற்ற திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய விழாவில் இடம்பெற்ற ஓர் உரையின் சுருக்கம்**

குஜராத் எழுத்தாளராகிய பன்னார்வால் பட்டேல் என்பவர் சுவாமி அரவிந்தரைச் சந்தித்தபொழுது, அரவிந்தர் கூறிய வார்த்தைகள் இவை "நீ பேசாதே உன் எழுத்து பேசட்டும்" ஆம் எழுத்தாளர்களின் எழுத்துத் தான் பேசவேண்டும். சிறுகதை என்பது நூறுமீற்றர் ஓட்டம் போன்றது. தொடங்கிய வேகத்திலேயே ஓடிக்கொண்டிருக்க வேண்டும், முடிவில் இன்னும் வேகத்தை கூட்ட வேண்டுமேயொழிய குறைக்கக்கூடாது; இது சிறுகதைகளுக்குப் பொருத்தமான ஒரு உதாரணம். சிறுகதை என்பது ஒரு சாளரப் பார்வை என்றும் கூறலாம். ஏனெனில் அங்கே ஒரு சில காட்சிகள்தான் தென்படும்; எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து விட முடியாது. சிறுகதை என்பது எட்கார் அலன்போ கூறுகின்றவாறு ஒரு மணி, அரை மணி நேரத்திற்குள் புலன் முழுவதையும் கட்டுப்படுத்தி, அதைக் கதாசிரியரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் ஆதிக்கத்தை தன்னகத்தே உடையது. இன்னும், பிறாண்டா மத்தேயு இப்படிக் கூறுவர். "சிறுகதை என்பது ஒரு பாத்திரத்தின் நடவடிக்கைகள் பற்றியோ, ஒரு தனிச்சம்பவம் பற்றியோ, அல்லது ஒரு தனி உணர்ச்சி உருவாக்கும் விளைவினைப் பற்றியோ எடுத்துக் கூறும் ஒரு இலக்கிய வடிவம்" என்று. எனினும் வொஜினியா வூள்வ் என்பவர் கூறுவது போன்று சிறுகதைக்குக் காலம் நகரவேண்டியதில்லை, பாத்திரம் மாறவேண்டிய

> நாம் விரும்புவது இதுதான். ருசியாவில் ஒரு செக்கோவ் போலவும், அமெரிக்காவில் ஒரு ஒகென்றி போலவும், பிரான்சில் ஒரு மாப்பசான் போலவும், இங்கிலாந்தில் ஒரு யேம்ஸ் பிறைஸ் போலவும் இக்காலத்தில்தான் இங்கு தோன்ற வேண்டும்.

நான் இங்கு எடுத்துக்கூறும் கதைகள்தான் மிகச் சிறந்தவை என்றோ நான் கூற வரவில்லை. ஆனால் முடிந்த அளவு நான் படித்தனவற்றை ஆதாரமாகக் கொண்டு எனது எண்ணத்தை ஓரளவு உங்களோடு பகிர்ந்து கொள்ளவே வந்துள்ளேன்.

இந்திய தமிழ் சிறுகதைகளோடு ஒப்பிடும் பொழுது ஈழத் தமிழ் சிறுகதைகளின் தரம் மிக உயர்ந்த இடத்திலேயே இருக்கின்றது. எமது ஆரம்ப எழுத்தாளர்கள் கூட ஒரு இலட்சிய ஆர்வத்துடனும், நோக்குடனும் தான் எழுத ஆரம்பிக்கிறார்கள் என்பதை இன்றைய சிறுகதைகள் நிரூபிக்கின்றன. குழந்தை விரும்புகின்றதே என்பதற்காக கானில் கிடக்கின்ற இனிப்புப் பண்டத்தை தூக்கிக் கொடுக்கும் தாய்மாராக நிச்சயமாக எமது எழுத்தாளர்கள் இல்லை. ஆனால் 1970 இன் பின் பாதியிலும் 80 இன் முன் பாதியிலும் எமது சிறுகதைகளின் தரம் குறிப்பிடத்தக்க அளவு உயர்வு நிலையில் இருந்ததுபோல் 83ன்பின்னர் இருக்கவில்லை. இக்காலகட்டத்தில் சிறுகதைகளின் தரம் படிப்படியாகச் சரியத் தொடங்கி விட்டது. என்னுடைய கருத்து மட்டுமல்ல. அநேக பிரபல சிறுகதை எழுத்தாளர்களின் கருத்தும் இதுவாகவே இருக்கின்றது. திரு. சொக்கன் ஐயா, அவர்கள் கூறியது போல இக்கால கட்டத்தில் கவிதை இலக்கியத்தில் காணப்பட்ட வேகம், முன்னேற்றம், சிறுகதை உலகில் காணப்படவில்லை என்பது உண்மையேயாகும்.

80களின் தொடக்கத்தில் சாந்தனின் "வீடு" இந்த மண்ணின் நிகழ்வுகளை, கோடிட்டுக் காட்டுகின்றது. சந்திரா தியாகராஜாவின் "தரிசு நிலத்து அரும்பு" அடக்குமுறைக்கு எதிரான உணர்வை பிரதிபலிக்கின்றது என்பது உண்மைதான். மல்லிகையில் வெளியான எனது "எரியும்" என்ற கதை குண்டுகளின் தாக்கம், கருவை, கற்பவதியை எப்படிப் பாதிக்கின்றது என்பதையும், அவள் வாழ்க்கையை எப்படி மாற்றுகின்றது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. இதேபோன்றே ராஜ்குமாரின் "காலம் உனக்கொரு பாட்டெழுதும்" "கோசலை" போன்ற கதைகள் ஒரு புதிய பரிமாணத்தை தோற்றுவித்தன எனலாம். 1986ம் ஆண்டளவில் அகஸ்தியரின் "பிறழ்வு" உயர்தர வகுப்பு சித்தியடைந்தும்கூட பல்கலைக் கழகம் புகமுடியாமல் ஏங்கும் உள்ளங்களின் மனநிலையை "முக்கடலைத் தாண்டியும் முத்தி பெறவில்லை. வானத்தில் கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. தொடர்ச்சியாக நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறுகின்றன சுதந்திரமாக" என்ற வரிகளின் மூலமாக அழகாக எடுத்துக் காட்டுகின்றார்.

1985ம் ஆண்டு எழுதப்பட்ட என்னுடைய "பட்டங்கள் மீண்டும் பறக்கும்" என்ற கதையில் துன்பங்கள் தொடர்ந்து வரினும் அதைத் தாக்குப் பிடிக்கும் நுளம்பு போன்ற மனிதர்கள் வருகின்றார்கள். "உன்னுடைய எண்ணத்திலும், செயலிலும் தன்னம்பிக்கை பரிணமிக்க வேண்டும். அவ்விதமாயின் உன்னை எதிர்த்து நிற்க உலகில் எந்த சக்தியாலும் முடியாது" என்ற எமர்சனின் கூற்றை அது வலியுறுத்துகின்றது – பட்டங்கள் மீண்டும் பறக்க காற்றடிக்கத்தானே வேண்டும். என் மனதில் இவ்வாறு தோன்றியது. 80இன் பின்னர் ஈழத்தமிழ் சிறுகதையின் போக்கில் ஏற்பட்ட மந்த நிலை இன்றுவரை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. அண்மைக் காலங்களில் போராட்டம் பற்றி பல கதைகள் எழுந்தனவாயினும் அவை வெறுமனே ஒரு பாத்திரம் இறுதியாக சேர்ந்துகொண்டான் என்றவாறு முடிவடைந்துவிடும். இக்காலத்தில் நடந்த ஏராளமான சிறுகதைப் போட்டிகளிலும் கூட 99% வீதமானவை இவ்வாறுதான் எழுதப்பட வேண்டும் என்ற முடிவோடு வரும் ஒரு வரையறை (Formula) கொண்டதாக அமைகின்றன. வெளிச்சத்தில் வந்த "வருகிறோம்" "எழுந்தான்" என்ற கதைகளும் அருணாவின் "விமோசனம்" ஜோசவ் பாலாவின் "நிவாரணம்" இதேவட்டத்திற்குள் நிற்கின்றமையை நாம் காணமுடிகின்றது. சிதம்பர சுப்பிரமணியன் கூறுவதுபோன்று எந்த ஒரு சிருஷ்டியும் வேதனையில் இருந்துதான் பிறக்கிறது. அந்த வேதனைதான் அந்த கலை சிருஷ்டியினை ஆனந்தமாகப் பரிணமிக்கிறது. ஆனால் அந்த வேதனை வளர்ந்துகொண்டு போகும் பொழுது ஒரு தேக்கநிலை ஏற்படுகின்றது. சிறுகதை என்பது வெறும் கடதாசியில் மட்டும் இடம் பெறுவதாக இல்லாமல், அது வாசகனின் மனதில் எழுதப்பட வேண்டும். கொஞ்சம் சொல்லி மிகுதியை அழகாக மறைத்து வைத்திருக்க எழுத்தாளனுக்குத் தெரிய வேண்டும். பெண்ணின் பிரச்சினையைக் கூற எழுந்த "நிர்ப்பந்தங்கள்" என்ற கதையில் ஆசிரியர் அவர்கள் பிரச்சினை முழுவதையும் சொல்லிவிட வேண்டும் என்று துடிக்கிறார். எண்ணம் முழுவதையும் சொல்லி விட வேண்டும் என்ற ஆவல் சிறுகதையின் அழுத்தத்தையும், கலைத்துவத்தையும் இழக்க வைக்கிறது. இக்காலகட்டத்தில் எழுந்த டானியல் அன்ரனியின் "வலை" முதலாளி தொழிலாளி பிரச்சனையை அழகாகக் காட்டுகின்றது. சட்டநாதனின் "உலா" "அரும்பு" குழந்தை உளவியலை மையமாக வைத்தது இக்காலகட்டத்தில் எழுந்த நல்ல கதைகள் என்று கூறலாம். வெளிச்சத்தில் த. கலாமணியின் "பலூன்" இல் ஓரளவு கட்டுரைத் தன்மை இருந்தாலும் கதையோடு ஒன்றிப் போகின்றோம். இன்னும் தவராஜாவின் "அடிவளவுப் புளியமரம்" எனது "முகாமுக்குப் போகாத அகதிகள்" இடம்பெயர்ந்தோரது வாழ்வை எடுத்துக்காட்டி வாசகர்களை திருப்திப்படுத்தியது என்று கூற முடியும். முன்பு சிரித்திரன் வாசகர்களுக்குத் தரமான கதைகளை வழங்கியது. ஆனால் 85 இற்குப் பின்னர் அந்த எதிர்பார்ப்பு ஏமாற்றத்தையே அளித்தது. 85இன் பின்னர் வெளியாகிய கதைகளில் இன்னுமொரு விடயத்தையும் நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதாவது பேச்சுத் தமிழ் கதை முழுவதும் கையாளப்படுதல், முன்பு கதாபாத்திரங்கள் மாத்திரம் பேச்சுத் தமிழில் பேசும், ஆனால் இப்பொழுது, ஆசிரியனும் அதே தமிழில் பேசுவதை கதை முழுவதும் நாம் காணுகின்றோம். இதை ஈழநாதத்தில் கி. சிவஞானம் எழுதிய முருகப்பெருமானும் கண்ணன் மாமாவும் என்ற கதையில் காணமுடிகின்றது. இது வரவேற்கத்தக்கதா இல்லையா என்பதை காலம்தான் உணர்த்த வேண்டும்.

இக்காலத்தில் பெண் விடுதலையைப் பற்றி ஏராளமான கதைகள் வெளிவந்தனவாயினும் அவை திருப்திகரமானதாக இல்லை. "Man in modern fiction" என்ற நூலில் எட்மண்ட புல்லர் கூறுகின்றார். "தற்கால புனைகதைகளில் பெண்களுக்கு உயிர்க்களையும், தனித்தன்மையும் அளிக்கப்படவில்லை; ஆண்மகனைச் சார்ந்து நிற்கும் இரண்டாம் தர வாழ்வே அளிக்கப்பட்டிருக்கின்றது" என்று. எமது சந்திரா தியாகராஜாவின் "மடமையைக் கொழுத்துவோம்" என்ற கதையில்கூட அவள் கணவனை மீறி இலக்கியக் கூட்டத்திற்குச் செல்வதாக இல்லை. அம்பையைப் போல் இல்லை. அம்பையின் சிறகுகள் முறிவதாகவும் இல்லை. ஆனால் யோசவ் பாலாவின் "காவல்" பெண்கள் தங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறது. 83இன் பின் பகுதியில் மக்களின் சிந்தனைக் கூட்டைக்கிளறி, அதை பிய்த்து தேன் எடுக்கக்கூடியதாக ஒரு கதை உருவாகவில்லை என்றே கூறலாம். திலீப்குமாரின் "தீர்வு" போலவும் சுந்தர ராமசாமியின் "தண்ணீர்" போலவும், விந்தனின் "மாட்டுத் தொழுவம்" போலவும் ஒரு கதையைக் காணவில்லை என்றே கூறவேண்டும். இன்று சிறுகதை உலகம் முன்னேறிக் கொண்டேயிருக்கின்றது. இந்தியாவில் ந. முத்துசாமி என்பவர் உளவியல் பகுப்பாய்வு மிக்க மிகத் திறமான கதைகளை எழுதிக் கொண்டேயிருக்கின்றார். நாம் விரும்புவது இதுதான் ருசியாவில் ஒரு செக்கோவ் போலவும், அமெரிக்காவில் ஒரு ஓகென்றி போலவும், பிரான்சீல் ஒரு மாபசான் போலவும், இங்கிலாந்தில் ஒரு யேம்ஸ் ஜிறைஸ் போலவும் இக்காலத்தில்தான் இங்கு தோன்ற வேண்டும். ▪

# இன்றைய நிகழ்வுகள் நாளைய இலக்கியங்கள்

– க. பாலநடராஜன் –

**1993ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் திகதி திருமறைக் கலாமன்றத்தினால் நடாத்தப் பெற்ற இலக்கிய விழாவில் இடம் பெற்ற ஓர் உரையின் சுருக்கம்.**

இலக்கியம் வெறுமனே பொழுதுபோக்கிற்கு மட்டும் உரியது என்ற எண்ணம் எப்பொழுதோ காலாவதியாகிவிட்டது என்றே நான் கருதுகிறேன். இலக்கியப்படைப்புக்களில் உருவம் முக்கியமானதா? அன்றேல் உள்ளடக்கம் முக்கியமானதா? என்பது குறித்த வாதப் பிரதிவாதங்களும் இப்பொழுது அவசியமற்றுப் போய்விட்டது. படைப்புகளில் அழகியல் அம்சம் குறித்த சர்ச்சைகளுக்கும் அப்பாற்பட்டு இன்றைய காலத்தின் நிகழ்வுகளை பதிவு செய்யவேண்டிய அவசியமும், தேவையும், பொறுப்பும் இந்தக் காலகட்டத்தில், இந்த மண்ணில் வாழும் படைப்பாளிகள், எழுத்தாளர்கள் தோள்களில் சுமத்தப்பட்டு இருக்கிறது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ருசியாவில் நிகழ்ந்த தொழிலாளவர்க்கத்தின் மாபெரும் எழுச்சியானது இலக்கியப் படைப்பாளிகள் பலரை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தது. "தாய்" என்ற மிக அற்புதமான நாவலை உலகுக்கு அளித்த மார்க்சிம் கார்க்கியின் கதாநாயகன் பாவெல் வெலாச்சிக்கோவ் நீதிமன்றத்தில் ஆற்றும் அந்த உரையைப் படித்த எவரும் உணர்ச்சிவசப்படாமல் இருக்கமுடியாது. "சார் மன்னனின் ஆட்சிமட்டும்தான் எம்மைப் பீடித்திருக்கும் சகல பிணிகளுக்குமான காரணமல்ல, ஆனால் அதுதான் முதல் விலங்கு" என்று அவன் உரத்த குரலில் முழக்கமிடும்பொழுது, நமது நாட்டின் இன்றைய சூழல் நம்மை உணர்ச்சி பொங்க வைக்கிறது. அதே போன்றுதான் இந்திய சுதந்திரப் போராட்டகாலம் பாரதி, தாகூர் போன்ற

அற்புதமான படைப்பாளிகளை உலகிற்கு அளித்தது. பாரதியின் சுதந்திரக் கீதங்கள் அலைகடலுக்கும் அப்பால் சென்று அகிலம் முழுவதும் இருக்கும் சுதந்திரத்திற்கான தேடலும் உணர்வும் படைத்த எவரையும் பாதிக்கக் கூடியதாகும், திராவிடர் இயக்கமும் அதன் செயற்பாடுகளும் பாரதிதாசனை இனங்காட்டியது. பாரதிதாசனின் சங்கின் முழக்கமும், வீரங்கொள் தமிழர் கூட்டமும், இவ்வாறானதோர் உணர்வையே ஊட்டியது. ஆகவே சத்திய ஆவேசத்தின் வெளிப்பாடுதான் இலக்கியம். உண்மை உணர்ச்சிகளின் உருவகிப்புத்தான் இலக்கியம், போலித்தன்மையும், கபடமும், சற்றேனும் கலவாத உணர்வுகள் ஊற்றெடுத்துப் பிரவாகிக்கும் பொழுது அவை பதிவு செய்யப்பட்டால், அதுவே எதிர்காலத்திற்கான இலக்கியமாகும். பிறரின் ஈன நிலைகண்டு துவளும் நெஞ்சை உடையதாகப் பாத்திரங்களைத் தன் கதைகளிலும், நாவல்களிலும் படைக்கும் எழுத்தாளர், தான் வாழும் காலத்திலேயே தன் இனம் ஈனநிலைக்கு உள்ளாக்கப்படும் பொழுது குமுறாமல் இருப்பது சாத்தியம்தான் என்பதுடன் கொஞ்சமும் ஒத்துப்போக முடியவில்லை. ஒரு இலக்கியப் படைப்பானது தான் சொல்ல விழையும் செய்தி மூலமாகச் செயலுக்கு உந்த வேண்டும் என்று நான் கருதுகின்றேன். சத்தியத்தின் பால் நாட்டத்தையும், சத்திய ஆவேசத்தையும் ஊட்டவேண்டும் என்று நான் கருதுகின்றேன். எனினும் "பொங்கி எழு" "புறப்படு" "இன்னுமா உறக்கம்" என்பன போன்ற முழக்கங்கள் வெறும் பிரச்சாரமயமாகி உணர்ச்சிவசப் படுத்த மட்டும் உதவும். ஒருவனின் மனதை மாற்றாது. உணர்வுபூர்வமாகச் சிந்திக்கச் செய்வதன் மூலமாகவே மனமாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.

வரலாற்றில் வாழும் நாயகர்களது சரித்திரங்களைப் படித்துச் சுவைக்கும்பொழுது நமது காலத்தின் வரலாறு ஒன்றைப் பதிவு செய்துகொள்ள நாமும் முற்பட வேண்டும் என்ற ஆர்வம் வாசகர்களிடம் பிறப்பெடுக்க வேண்டும். இலக்கியப் பிரியர்களிடம் வரலாறு என்பது படிப்பதற்கு மட்டுமல்ல படைப்பதற்கும் உரியது என்ற உணர்வை எழுத்தாளர்களின் ஆக்கங்கள் தொற்றவைக்க வேண்டும்.

எனவேதான் எழுத்தாளன் அல்லது இலக்கியப் படைப்பாளி என்பவன் ஒரு சமூக வைத்தியன்போல செயற்பட வேண்டியவனாகிறான். ஒரு நோயாளியை பரிசோதித்து அறியவும், அவனுக்குண்டான நோயைப் புரிந்து அதனைத் தீர்க்கவும், மீண்டும் அந்த நோய் அணுகாமல் சிகிச்சை அளிக்கவும் கூடிய வைத்தியன்போல் சமுதாயத்தைப் புரிந்துகொள்ளவும், புரிந்துகொண்ட சமுதாயத்தை உன்னத நிலைக்கு மாற்றவும், மாற்றிய சமுதாயத்தில் சீர்கேடுகள் அணுகாவண்ணம் யதார்த்த பூர்வமாக வழிகாட்டவும் எழுத்தாளர்களும் இலக்கியப் படைப்பாளிகளும் கடமைப்பட்டுள்ளனர்.

எனினும் இன்றைய சமகால நிகழ்வுகளை நாம் எண்ணிப்பார்க்கையில் இன்று இலக்கிய உலகம் பெருமைப்படத்தக்கதாக எதையும் சாதித்துவிட வில்லை என்றே தோன்றுகின்றது. இந்தக் காலகட்டத்தில் வாழக் கிடைத்ததை பெரும் பாக்கியமாக நாம் கருதுகிறோமா? சமூகப் பொறுப்பும், உணர்வும், நேசமும் மிக்க மனிதர்கள் எவரும் இன்றைய நிகழ்வுகளை முறைப்படி பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற உணர்வை எழுத்தாளர்கள் மக்களுக்கு ஊட்டவேண்டும். இலக்கியத்தின் மூலமும் வேறு படைப்புக்களின் மூலமும் தமிழினத்தின் வேட்கையை வெளிப்படுத்திய படைப்புக்களை வகுப்புவாதம் என்றும் இனவாதம் என்றும் முத்திரை குத்திய முற்போக்குவாதிகள் எனப்பட்டோரின் குரல் இப்பொழுது ஓய்ந்து விட்டது. மு.தளையசிங்கத்தின் "தனி வீடு" என்ற தீர்க்கதரிசனம் வெறும் வார்த்தைகளாக மரித்துவிடவில்லை. அது ஏட்டில் மட்டுமல்ல, எதிர்காலத் தமிழ்ச் சந்ததியை நேசிக்கின்ற ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஒலிக்கின்றது. எனவேதான் இன்றைய நிகழ்வுகள் சத்திய உணர்வோடும், தர்ம ஆவேசத்துடனும் பதிவு செய்யப்பட்டு நிச்சயமாக நாளைய இலக்கியங்களாக மலரும் என்பது திண்ணம். எமது மண்ணின் மனச்சாட்சியின் குரலாகக் கலை, இலக்கிய வெளிப்பாடுகள் அமையவேண்டும். இன்றைய நிகழ்வுகளைப்பதிவு செய்வதன்மூலம் எதிர்காலத் தலைமுறையின் கைகளுக்கு நாம் நடந்து சென்ற பாதையையும், அதில் சொரிந்த வியர்வையையும், கண்ணீரையும், பட்ட துன்ப துயரத்தையும் கோடிட்டுக் காட்டுவோம்.

**இலக்கியத்தின் மூலமும் வேறு படைப்புக்களின் மூலமும் தமிழினத்தின் வேட்கையை வெளிப்படுத்திய படைப்புக்களை வகுப்புவாதம் என்றும் இனவாதம் என்றும் முத்திரை குத்திய முற்போக்குவாதிகள் எனப்பட்டோரின் குரல் இப்பொழுது ஓய்ந்துவிட்டது. மு. தளையசிங்கத்தின் "தனிவீடு" என்ற தீர்க்கதரிசனம் வெறும் வார்த்தைகளாக மரித்துவிடவில்லை. அது ஏட்டில் மட்டுமல்ல, எதிர்காலத் தமிழ்ச் சந்ததியை நேசிக்கின்ற ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஒலிக்கின்றது.**

# தொடர்பு சாதனங்களின்

# மந்திரச் சொல்லாற்றல்

சுதந்திரமான தொடர்பு சாதனங்கள் இல்லாமல் சுதந்திரமான சமுதாயம் இயங்க முடியாது என்ற உண்மையை அண்மைக் காலங்களில் உலக சமுதாயம் வேகமாக உணர்ந்து வருகின்றது.

ஆதிக்க வலு நிரம்பிய ஆட்சிகளின் மத்தியில் ஆளுமையை இழந்து வந்த நாடுகள் இந்த உண்மையைப் பற்றி உரத்துச் சிந்திப்பதுடன் புதிய தகவல் ஒழுங்குகளை ஏற்படுத்துவது பற்றி ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றன.

பொதுமக்களின் விவாதங்கள் வெளிப்படையாக ஒழிவுமறைவின்றித் தீர்மானங்களை எடுத்தல், சுதந்திரமான கருத்துப்பரிமாற்றம், பொதுமக்களின் அபிப்பிராயங்களை இனம் காணுதல், தகவல்கள் ஆதியன - அபிவிருத்தியை நோக்கி முன்னேறும் ஜனநாயக நாடுகளுக்கு இன்றியமையாதவை.

காத்திரமான தீர்மானங்களை எடுப்பதற்கு வெகுஜனதொடர்பு சாதனங்கள் ஆரோக்கியமான களத்தை ஏற்படுத்தாத நிலையில் எதனையும் இலகுவாக சாதிக்க முடியாத நிலைமையே ஏற்படும். இருண்ட ஒருவழிப்பாதையில் செல்லும் சமுதாயமே மிச்ச சொச்சமாகும்.

ஒரு திறந்த சமுதாயத்தை வரம்புகள் மீறாத நிலையிலே உருவாக்குவது இலேசான காரியமல்ல. புதிய சுதந்திரம் பெற்ற உலக ஜனநாயக நாடுகள் தாம் பெற்ற சுதந்திரத்தை சரியான வழியில் பேணவும், நிறுவனங்களின் ஆளுமை குறையாது நெறிப்படுத்தவும் இன்றியமையாத மூலவிசை உறுதியானதும் சுதந்திரமானதுமான தொடர்புகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. பொதுமக்களைச் சார்ந்த துறையும், தனியார்துறையும், எழுச்சிபெறுவதும், வளர்ச்சி பெறுவதும், உறுதியடைவதும்

**ஆ. சிவநேசச்செல்வன்** M.A.,M.Sc.
**பிரதம ஆசிரியர்**
**வீரகேசரி**

செய்தியாளர்களினதும், அரசியல் வாதிகளினதும் பொறுப்புணர்ச்சி வாய்ந்த நடத்தைகளிலேயே தங்கியுள்ளது.

கட்டுப்பாடுகளின் மத்தியிலும், தடைகளின் மத்தியிலும் பணியாற்றிய ஒரு பத்திரிகையாசிரியரை அணுகி இப்பொழுது சுதந்திரமான தாராளக் கொள்கையுடன் வெகுஜன தொடர்பு சாதனங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன. இது ஒரு புதிய பாதையைத் தோற்றுவித்துள்ளது என்று கூறியபோது அவர் கூறிய பதில் இதுதான் நீண்டகாலத் தடைகள், கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளோம்.

ஆனால் இப்பொழுது எங்கள் தொழில் மிகவும் பாரதூரமானது. எந்த விடயத்தையும் உண்மையானதா, தவறானதா எனக் கண்டுபிடிக்கும் பொறுப்பு எமது தலையிலேயே விழுந்துள்ளது. இந்தப்பதில் செய்தியாளரிடம் இருக்கவேண்டிய பொறுப்புணர்ச்சிகளையும் தார்மீகக் கடமையையும் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

ஒரு திறந்த சமுதாயத்தில் செய்தியாளர்கள், அரசியல் வாதிகள், அதிகாரிகள், பொதுமக்களுடன் தகவல் பரிமாற்றங்களைச் செய்வது ஒரு கடினமான பணியாகும். உறுதியான ஜனநாயக மரபுகளை உடைய பண்பட்ட நாடுகளில் கூட தகவல் பரிமாற்றங்களைத் தொடர்வது போராட்டமாக உள்ளது. புதிய ஜனநாயக நாடுகள் தமது மரபுகளை ஒழுங்குபடுத்தும் பாதையிலே சுதந்திர வெகுஜன உலகத்தை வெளிப்படுத்தும் பணியில் நிரம்பிய போராட்டங்களைச் சந்தித்து வருகின்றன.

எந்த ஒரு நாட்டாலும் சுதந்திரமான வெகுஜனதகவல் சாதன அடிப்படைகள் மூன்று பிரதான அம்சங்களைப் பின்னணியாகக் கொண்டுள்ளன. முதலாவது - தகவல் சாதன நியமனங்களை உறுதிப்படுத்தும் சட்ட ஒழுங்குகளும், வரம்பும்; இரண்டாவது புதிய சந்தைக்கேற்ப உறுதியான பொருளாதார பலத்தை

வலியுறுத்தும் தகவல்துறையை ஒழுங்கு செய்யும் முகாமைத்துவம்; மூன்றாவது - தொடர்புத்துறை அறிவுப் பின்னணியும் தொழில் சார் பயிற்சியும் நிறைந்த செய்தியாளர்களும் அவர்கள் பொறுப்புக்களை பேணும் விதமும். இந்த மூன்று அடிப்படைகளும் சரிவர ஒழுங்குபடுத்தப்படும்போது தாராளக்கொள்கையுடைய வெகுஜன உலகம் உருவாவது மட்டுமன்றி அபிவிருத்திப்பாதையும், அரசியல்பாதையும், ஒன்றிணைந்த ஆரோக்கியமான சமுதாய எழுச்சியும் உருவாகும்.

**பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி** ஆதியன எமது நாளாந்த வாழ்க்கையின் அங்கங்களாக மாறிவிட்டன. இன்றைய சமூகத்தில் வாழ்ந்து பழகிய ஒரு மனிதன் இவை இல்லாத சூழலில் வாழ்க்கையின் அர்த்தத்தையே இழந்தவனாகின்றான்.

வேகமான சமூகமாற்றங்களின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மாற்றங்கள் தோன்றுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதற்கு முன்னர் யாவுமே நடந்தேறிவிடுகின்றன. எமது விருப்பு வெறுப்புக்களை எதிர்பாராமலே எல்லாம் நடைபெற்றும் வருகின்றன. இன்றைய காலகட்டத்தில் வேகமாக மாறி வரும் சூழலை உணரத்தவறினால் வலுவிழந்தவர்களாக மட்டுமல்ல செயலிழந்தவர்களாகவே மாறி வருகின்றோம்.

வெகுஜனதொடர்பு சாதனங்களான **பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், சஞ்சிகைகள், பருவ இதழ்கள்** தமது இடையறாத கருத்துப்பரிமாற்ற ஆற்றலால் திடீரென விளங்கிக்கொள்ள முடியாத பல்வேறு மாற்றங்களை சமூகத்தில் திணிக்கின்றன.

எமது மூதாதையர் காணத்தவறிய, அனுபவிக்கத்தவறிய எத்தனையோ மாயங்கள் எமது ஆளுமையையே ஆட்கொள்ள முற்படுகின்றன. வெகுஜனதொடர்பு சாதனங்கள் எமது நாளாந்த வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தமையின் காரணமாக அவ்வவற்றின் ஆற்றல், செயற்பாடுகள், ஆளுமைப் பண்புகள் ஆதியனவற்றை எல்லோரும் புத்திபூர்வமாக விளங்கிச் செயற்பட முற்படுவதில்லை.

இன்றைய நவீன சமுதாயத்தில் பல்வேறு மட்டத்தில் தொடர்பு சாதனங்கள் ஊடுருவியுள்ளமையை பலர் நினைப்பதுபோல இலேசாக விளங்கிக் கொள்வது கடினமானது. வெகுஜன தொடர்புத்துறையில் பணியாற்றும் பலர் தமது பணிபற்றி தெளிவான விளக்கமற்றவர்களாகவும் உள்ளனர். இந்தத்துறையில் பெரிய இலாபத்தையும், செல்வாக்கையும் தரும் ஒரு தொழிலாகக் கருதும் நிலைமையையே பரவலாக எங்கும் காண்கின்றோம்.

தயாரிப்பு விநியோகம், உள்ளடக்கம் ஆதியனவற்றிற்கு உறுதுணையாகவும், மூலவிசையாகவும் இருக்கும் விளம்பரதாரர்கள் தமது பொருட்களின் பரந்த விநியோகத்திற்கான பரம்பலிலேயே பொதுவாக அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றார்கள். வாசகர்கள் அல்லது நேயர்கள் பொதுவாக தொடர்புசாதனத்தின் வெகுஜனக் கவர்ச்சியுடனும் ஜனரஞ்சக தன்மையுடனும் திருப்தி அடைந்து விடுகின்றார்கள்.

தகவலை அளிக்கும் சாதனமாகவும், கருத்துக்களால் மகிழ்ச்சியூட்டும் ஊடகமாகவும் மட்டும் வெகுஜனதொடர்பு சாதனத்தை கொள்ளமுடியாது என்பதை சமூக விஞ்ஞானிகள்தான் அழுத்தியுரைக்க முற்படுகின்றனர்.

இவ்வாறான பொதுவான கருதுகோள்களின் பின்னணியில் வெகுஜனதொடர்பு சாதனங்களின் “மந்திரச்சொல்லாற்றலை நாம் எவ்வாறாகவும் குறைத்து மதிப்பிட முடியாது. வெகுஜனதொடர்பாற்றலையும், அவற்றினூடாக நாம் பெறும் செய்திகளையும், ஆய்வு விளக்கங்களையும், வியாபார அளவுகோல்களின் மூலமாகவும், விஞ்ஞான எல்லைகள் மூலமாகவும் இலேசாக அளந்தறியவும் முடியாது. வெகுஜன தொடர்பு சாதனங்களைச் சாதாரணமாகப் பெறமுடிகின்றது. இலகுவாக கிடைக்கின்றது என்பதனால் அவற்றின் மூலம் பெறும் மந்திரச்சொல் விளக்க ஆற்றலை அறிவுபூர்வமாக உணர்ந்துகொள்ளவும் தவறிவிடுகின்றோம்.

## பேதமை

ஒரு வகுப்பு மாணவரில்
ஒருவனையே அறிந்துவிட்டு
வகுப்பிலுள்ள மாணவர்கள்
அனைவருமே அப்படித்தான்
என்றுரைத்தல் பேதமையே.

ஒரு பானை சோற்றுக்குள்
ஒரு சோறு பதமென்று
மேதைகள் சொல்லுவரோ?

சடத்துக்கும் உயிருக்கும்
வேற்றுமையைக்
கண்டுணர்ந்து
ஏற்றதோர் பழமொழியை
எடுத்தாள்தல் தான்
மேன்மை;
எடுத்தெடுப்பில் ஏறுமாறாய்
பழமொழிகள் எடுத்தாண்டு
பல்லிழிந்து போவதனை
சொல்லியா தெரியவேண்டும்.

-குமிலன்-

# The theatre of the future

## some questions to stretch the imagination

In the world of theatre thinking about the future usually means worrying about the next stage engagement, the coming premiere or tour, the following season. And yet in order to grow and develop and to adjust to the rapid changes in its surroundings, theatre needs to reflect on its own future well beyond immediate concerns and urgent needs. A sort of a medium- and even a long- term futurology, and not sheer prophecy, seems to be necessary in order to ensure the survival of theatre as an art form, a medium of public communication and social activity. Such future oriented reflection could counter the prevailing problem-solving mindset permeating the discussions of today's theatre and at the same time offset the scholarly study of the past that is so often divorced from contemporary practice.

What is the future of theatre and what are the factors determining or threatening its future?

Textual theatre, opera and some other disciplines have been repeatedly declared dead only to show new signs of vitality. One can perhaps assume that new disciplines and genres will emerge in the future. Even then, considerable synergic potential remains in the combination of various branches of the performing arts and their means of expression, and in a broader perspective, productive impulses continue to come from the visual and plastic arts, film, video and music.

During the last decades theatre has been overshadowed by electronic media and especially television, but it has become clear that video opens up new venues for combining live action on the stage and an image on a screen or monitors. More recent developments with digital media stress interactivity and therefore, if applied to the live performing arts, probe the essential notion of theatre as a predetermined event offered, or served as it were, to a recipient. Aleatoric combinations and more active participation of the 'audience' capable of choosing or intervening, become a not too remote possibility. The ongoing experiments with virtual reality indicate a histrionic experience of such fantastic proportions and outreach that everything that theatre can offer might appear superfluous and pitifully limited - except the experience of collectivity, which remains its lasting advantage.

Theatre has, as everything else in our lives, become very dependent on technology. In principle, technology is meant to enhance aesthetic impact but it brings along its own constraints. What is the price paid, in the practical as well as the creative sense for increased reliance on technology, and what are the limits and less obvious consequences? Is the high tech approach a potentially suffocating threat to the

artistic essence of theatre or does it work to support the presence of a live performer?

Theatre's dependence on technology is not a global phenomenon, however. In many parts of the Third World theatre is forced to function on a much lower technological level, posing the question in what other aspects is the future of theatre in the developing countries different than in the developed world. One could hypothesise that in the Third World theatre already functions as an instrument of development and therefore has more a social than an artistic role to play in the future as well.

Isn't theatre increasingly acquiring such a role in the developed world as well through the application of theatrical methods and techniques in education, therapy and politics, where pragmatic impact is more important than possible artistic merit?

Are today's established production and presentation models of the present to be merely expanded and refined in the future, or are they to be replaced with significantly different solutions based on new economic necessities and changes in allocation of free time of many social groups?


What is to happen with the audience? Some statistics indicate a decrease in the theatre- going public in the developed countries. But the same statistics may be describing the demise of general theatre audiences and the emergence of particular social groups that need only be developed into a new public. In the future, who you are playing for might become a more important question than what you are playing. Targeting an audience might become more a matter of desired social impact than of marketing, a precondition for successful communication based on complementary interests and values rather than the certainty of economic viability.

How is theatre to vacillate in the future between strong commercial pressures and mass production on one hand and uniqueness of the act of performing on the other? While the mass produced offerings of the industry of consciousness have affected theatre as well, where are the points of resistance in the performing arts, the resources for unique, subversive and challenging gestures? And how is the principle of public subsidy for an art form that is inherently expensive (and therefore vulnerable to accusations of elitism) to fare in the ongoing dismantling of the welfare state and compromising of its premises, imbedded in liberalism?

What is the future of the growing specialisation and division of labour in the theatre world. A millennia ago, the theatre consisted of an actor in a given space in front of some viewers. Now it has grown to a myriad of interconnected theatre professions, many of them of managerial or technical nature, leaving what amounts to only a nominal central position for the artists.

If theatre is to reinvoke its urban origins and urban identity, how is the performance to interact with broader urban space, beyond the constraints of a structure, built specifically for the performance? And when performances are held in a variety of incidental or repossessed locales, how does the performative activity reshape the local communities and their awareness of the common and familiar space that otherwise has a non-performative use?


And in the enclosed space, what spacial relations are to replace the still prevailing frontal arrangement of viewers and performers that has been with us since the Renaissance?



How is the future of the theatre related to the global future of the arts and to the future of the world in general, in political, economic, and environmental terms, and where are the points of friction and conflict in these 'megatrends'?

These and other related questions beg for answers or at least for a debate. Any discourse about the future is imbedded in the present and burdened with the immediacy of present experiences. Taking this into account, imagination needs to be applied to developments that are not necessarily happening in a continuum and thus cannot be predicted by mere extrapolation.

volume 10 Th&D 2 1993




**பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள் அவர்கட்கு**
**இயக்குனர் - திருமறைக்கலாமன்றம்.**
**பேரன்புடையீர்!**

திருமறைக் கலாமன்றத்தின் நிகழ்ச்சிகள் என்றால் அதற்கு ஒரு தனி மவுசு உண்டு. நான் நிகழ்ச்சிகளைக்கண்டு இரசித்து பேரானந்தம் கொண்ட காரணத்தால் இம்மடலை வரைகிறேன். 20-6-93ல் நடந்த இசை விழாவில் அறிவிப்பாளராகக் கடமையாற்றியவர் மிகவும் சிறப்பாக நல்ல தமிழ்ச் சொற்களைப் பாவித்து இசை மாலைக்கு ஒரு தனிச் சிறப்பைப் பெற்றுக் கொடுத்தார். நிகழ்ச்சி அமைப்பாளர் ஆரம்பப் பாடல் ஒன்று மிகவும் சிறப்பாகப்பாடி தமது முத்திரையைப் பதித்துக் கொண்டார். நிகழ்ச்சியில் பங்கு கொண்ட அத்தனை பேரும் மிகவும் சிறப்பாகப் பாடினார்கள். யார் சிறப்பாகப் பாடினார்கள் என்று தனித்துவம் காட்ட முடியாதபடி யாபேரும் சிறப்பாகச் செய்தார்கள். இவர்களுக்கு பக்க வாத்தியங்கள் மிகவும் சிறப்பாக வழங்கிய அத்தனை பேரையும் போற்றத்தான் வேண்டும்.

நாடகத்தை எடுத்துக் கொண்டால் தொடங்கிய நேரம் முதல் முடியும் வரை ஒரு திறில் ஆக கண்ணுக்குக் குளிர்ச்சியாக, கருத்து மிக்க கதையோடு, எதுவித நெகிழ்ச்சியும் இன்றி, அடுத்தகட்டம் என்ன என்று கேள்விக் குறியோடு முடிந்து தொடங்குகிறது. பங்கு கொண்ட அத்தனை பேரும் தமக்குக் கொடுக்கப்பட்ட பாகங்களை மிகவும் சிறப்பாகச் செய்து மக்களின் ஆதரவைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் நீங்கள் திருமறைக் கலாமன்றத்தின் மூலம் செய்யும் சேவை மக்களின் உள ரீதியான பிரச்சனைகளைத் தீர்க்கவும், மக்களுக்கு துன்பத்தில் இன்பத்தைக் கொடுப்பதுமாக இருக்கிறது.உங்கள் சேவை தொடர ஆசிக்கிறேன்.

**சீ. துரைசிங்கம்**
64,புவனேஸ்வரிவீதி,அரியாலைமேற்கு,யாழ்ப்பாணம்.

இவ்விழாவினால் ஏராளமான தமிழ் மக்கள் பயன் அடைந்திருப்பார்கள். எங்கள் தமிழ் இலக்கிய சுவையை உணர்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனினும் இவ்விழாவில் இலக்கிய மணம் பரப்பக்கூடிய இலக்கியம் சம்பந்தமான பட்டி மன்றம், வழக்காடு மன்றம் என்பவை இல்லாதது மிகவும் ஒரு ஏமாற்றத்தை இலக்கிய இரசிகர் மத்தியில் உருவாக்கியது. இவற்றை ஏன் தாங்கள் அமைக்கவில்லையோ யான் அறியேன். இருப்பினும் இப் போராட்ட சூழ்நிலையில் தாங்கள் சிரமம் பாராமல் சேவை நோக்குடன் நடாத்திய இலக்கிய விழாவை நான் மெச்சுகின்றேன். பாராட்டுகின்றேன். இப்படியான விழாக்களை தாங்கள் தொடர்ந்து நடத்தி, தமிழ் மணம் பரப்பி, தமிழ் மொழிக்கு அளப்பரிய சேவை செய்ய உங்கள் திருமறைக் கலாமன்றம் நீடூழி வாழ்க.

நன்றி

**ரி. முகுந்தன்.**
62/ 5 பிறவுண் வீதி,கமானியா
அவனியூ,
யாழ்ப்பாணம்.

உங்களால் நடாத்தப்பட்ட இலக்கிய விழா நிகழ்ச்சிகளில் கலந்து அதன் சிறப்பை உணர்ந்த ஒரு கலா இரசிகன் என்ற வகையில் இந்த மடலை உங்களுக்கு வரைகிறேன். 1993 ஜுன் 25 வெள்ளிக்கிழமை சரியாக 5:30 மணி. அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபம் கலா இரசிகர்களால் நிறைந்து காணப்பட்டது. இன்னிசைக் கீதங்களை ஒலிபரப்பிய ஒலி பெருக்கி அமைதியாகிறது. மேடைத்திரைஅசைந்து அரங்குகிறது.

அங்கே நல்லூர் பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசை இடியென ஒலிக்கிறது. பார்வையாளர்களின் முகங்களில் மகிழ்ச்சி. ஒரு மணித்தியாலம் போன வகையே தெரியவில்லை. மாலை 6:30 மணிக்கு மங்கள விளக்கேற்றல். பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களால் நிறைவேறுகிறது. அடுத்து திரு. சி. நாகராசா அவர்களால் தமிழ்த்தாய் வாழ்த்து முடிய சலங்கை ஒலி கேட்கிறது. இலக்கிய விழாவோ அல்லது நாட்டிய நடன விழாவோ என்று திகைக்க வைக்கும் வண்ணம் வரவேற்பு நடனம் கவின் கலைப்பகுதியின் (திருமறைக் கலாமன்றத்தின் ஒரு அங்கம்) 3 மாணவிகளால் பார்ப்போர் திகைக்கும் வண்ணம் மக்களின் மனத்தில் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும் வண்ணம் வரவேற்பு நடனம். நடனத்திற்கு திரு. எம். யேசுதாஸ் (இசைத்தென்றல்) அவர்களால் பாடப்பட்ட கருத்து நிறைந்த பாடலு!ம், இசையின் ஒலியும், அதற்கேற்ப நடன மாணவர்களின் ஒவ்வொரு அசைவும் மக்கள் உள்ளங்களை கொள்ளை கொண்டு போய் விட்டது. நான் என்னையே மறந்து ரசித்துக் கொண்டிருந்தேன். நடனத்தை முடியாமல் இன்னும் தொடர்ந்து ஆடுவார்களோ என்ற ஏக்கமும் ஆசையும் உள்ளத்தைத் தொட்டது. அவ்வளவிற்கு நடனமும் பாட்டும் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் இனிமையாக இருந்தன.

தலைமையுரை, சிறப்புக்கள் சிறந்த பல்கலைக்கழக அறிஞர்களால் கொடுக்கப்பட்டதால் மிகவும் முக்கியமாக அறிய வேண்டிய பல கருத்துக்களை பெற்றுக்கொள்ள முடிந்தது.

**வெளியீடு - கலைமுகம் காலாண்டு கலை இதழ்** - சிறந்த அம்சங்களோடு மிகவும் கவர்ச்சியான அட்டையுடன் வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது. திருமறைக்கலாமன்றத்தின் சிறந்த ஆளுமையை இது எடுத்து இயம்புகிறது.

அடுத்து கலை நிகழ்ச்சியில் - "ஔவையார்" இலக்கிய நாடகம் - திருமறைக் கலாமன்ற நாடகப்பகுதியால் நடித்துக் காட்டப்பட்டுள்ளது. ஔவையார்தான் உயிரோடேயே வந்து விட்டாரோ என்ற உயிரோட்டமான நாடகம். சகல கலைஞர்களும் சோடை போகாமல் மிகவும் சிறப்பாக நடித்தார்கள். உடுப்புக்கள், மேடை அலங்காரம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சியும், உரையும், கதையும்** - நடைபெற்ற அத்தனை நிகழ்ச்சிகளும் குறிப்பாக நீதிகாத்தான் இலக்கிய நாடகமும் பலே ஜோர். கலாமன்றத்தின் முத்திரை பதிக்கப்பட்டிருந்தது. இறுதிநாள் நிகழ்ச்சி எமது நல்லூர் லயன் கழகக் கூட்டம் நடைபெற்ற காரணத்தால் கலந்து பார்க்காதது மிகவும் கவலை. ஆனாலும்கற்பனை மூலம் சிந்தித்தேன். சிறப்பாகத்தான் இருந்திருக்குமென்பதில் ஐயமில்லை.

இத்தனைக்கும் மன்ற இயக்குனர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சுறுசுறுப்பாக இயங்கியதை நான் நேரடியாகக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். இப்படியான ஓர் கலை வளர்க்கும் மன்றத்தில் தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் மக்களுக்கு ஏற்படும் துன்பங்களை ஓரளவு மறந்து குதூகலமாக மகிழ்ச்சியாக, மக்கள் சூழ்நிலையை மறந்து இன்புற்று இருக்க வழிவகுக்கும் உங்கள் மன்றத்தை வாழத்தாதவன் வாழ்த்தவனே. போர்க்காலச் சூழ்நிலையால் இடம் பெயர்ந்து வீடுகளை விட்டு வேறிடத்தில் அகதிகளாய் கவலைகளால் எல்லாம் இழந்து வாழ்ந்து கொண்டு, மனரீதியாக, உளரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நீங்கள் கொடுக்கும் வெளிச்சம் இது.

மக்கள் இவ்வளவு திரளாக வருவதற்கு காரணம் என்ன? திருமறைக் கழகத்தால் நடாத்தப்படும் அத்தனை விழாக்களும் சிறப்புடையன. இசை விழாவா? இலக்கிய விழாவா? முத்தமிழ் விழாவா? அன்றேல் நாட்டுக்கூத்து விழாவா? எது சோடை போனது? ஒவ்வொரு விழாவும் சிறப்பாகத்தான் நடைபெற்றது.

உங்களால் இவ்வருட முற்பகுதியில் நடாத்தப்பட்ட "பலிக்களம்" நாடகம் உண்மையில் மெய்சிலிர்க்க வைத்த நிகழ்ச்சியாகும். அன்று நடைபெற்ற காட்சி அமைப்பு, நடிகர்களின் உருவமைப்பு, அவர்களின் உடை அலங்காரம், இசையமைப்பு அத்தனையும் 2000 ஆண்டுகளிற்கு முன் எம்மை அழைத்துச் சென்ற நிகழ்வை நாம் மறக்கமுடியாது. அப்போது நடந்த

நிகழ்வுகளை தத்ரூபமாக அது மக்களுக்கு இப்போது வைத்து கல்வாரிச் சிலுவையில் இயேசுவை அறையும் காட்சி மூலம் கண்ணீர் சொரிய வைத்த நிகழ்வை சொல்லாமல் இருக்க முடியாது.

எத்தனை ஆயிரம் மக்கள் பார்த்தார்கள். எத்தனை ஆயிரம் மக்கள் பார்க்க முடியாமல் திரும்பினார்கள் என்பது எனக்குத் தெரியும். அக்காட்சியைப் பார்க்காதவர்கள் பெரிய இழப்பை அடைந்தார்கள். பார்த்தவர்கள் பெரிய பேறையே பெற்றவர்கள். யாழ்ப்பாணத்தில் நாடக விழாவிற்கு இப்படியான திரள் கூட்டம் வந்ததை நான் பார்த்ததில்லை. நல்ல சூழ்நிலை இருந்த காலத்தில் தினகரன் விழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு வந்த மக்கள் கூட்டம் போன்ற மக்கள் கூட்டம். தினகரன் விழா இலவசம். ஆனபடியால் கூட்டம் அதிகமாகக் கூடிற்று. ஆனால் இங்கே அனுமதி மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியாய் இருந்தபோதிலும், யாழ் பிரதான வீதியில் அலை மோதிக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தை மறந்து விடமுடியாது.

இதற்குக் காரணம் சிறந்த இயக்குனர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளின் ஆளுமையாகும். அத்தோடு அவரோடு சேர்ந்து உற்சாகமாக இயங்கும் மன்ற செயற்குழு உறுப்பினர்கள் என்பதும் மிகையாகாது.

திருமறைக் கழகம் தொடர்ந்து மனது சிறப்பான தலைமையின் கீழ் முத்தமிழையும் வளர்க்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன். இறைவன் ஆசி உங்களோடு இருப்பதாக.

இப்படிக்கு
கலை இரசிகன் லயன்

**செ. துரைசிங்கம்.**
64, புவனேஸ்வரி வீதி
அரியாலை மேற்கு
யாழ்ப்பாணம்

குறிப்பு: இந்தத் திருமறைக் கலாமன்றம் மூலம் மக்களுக்கு அருமையான சேவையைச் செய்யவேண்டுமென்று என் மனம் என்னை ஏவுகின்றது.

ஆகவே எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் மிக மகிழ்வேன். அங்கத்தவர்கள் ஆவதுக்குரிய விண்ணப்ப படிவங்களை அனுப்பி வைத்தால் மகிழ்ச்சியடைவேன்.

---

தமிழுக்கு முத்தமிழ் என்று பெயர். முத்தமிழ் போல் வேறெந்த மொழியிலும் சொல்வதில்லை. இத்தகைய சிறப்பு வாய்ந்த முத்தமிழிற்கு ஆறு நாட்கள் விழா எடுத்தீர்கள். இலக்கிய விழாவில் மூன்று நாட்களும் கலந்துகொண்டு தமிழின் இனிமை, தொன்மை, தன்மை என்பவற்றை அருந்தி மகிழ்ந்தேன்.

மூன்றாம் நாள் காலை கைலாசபதி அரங்கில் பண்டித மணிக்கு விழா எடுத்தவர்கள் திருமறைக் கலாமன்றத்தின் சைவ சித்தாந்த பேருரை பற்றியும், பேசி மகிழ்ந்தார்கள்.

அதன்பின்னர் மாலை இலக்கிய விழாவில் அப்பேச்சின் பிரதிபலிப்புக் காணப்பட்டது.

இலக்கியத்திற்கு ஒரு இலக்கு இருக்கிறது. இலக்கு+இயம். அந்த இலக்கைப்பற்றித்தான் சைவன், கிறிஸ்தவன், இஸ்லாமியன் சிந்திக்க வேண்டும். அத்தகைய சிந்தனையின் உச்சக்கட்டத்தில் திருமறைக்கலாமன்றம் உயர்ந்து நிற்கிறது. இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. எனது மனமகிழ்ந்த பாராட்டுக்கள். தங்களுக்கும் திருமறைக் கலாமன்றத்தினருக்கும் என்றும் உரியது.

தாங்கள் நடாத்தி வரும் மாதாந்த இலக்கியக் கருத் தரங்கில் - மூன்று தடவைகள் கலந்து கொண்டேன். இந்த நாட்டில் ஏறத்தாள 200 தமிழ் எழுத்தாளர்கள், 100 சிறந்த தமிழ் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். யாழ் மாவட்டத்திலும் 50ற்கு மேற்பட்ட பேச்சாற்றல் உள்ளவர்கள் இருக்கிறார்கள். மாதம் ஒருவராகப் 12பேரை அறிமுகப்படுத்தி, சிறப்பிக்கத் திருமறைக் கலாமன்றம் முன்வர வேண்டும்.

பாட்டுக்கொரு புலவன் பாரதி தினம் செப்டம்பர் 11ம் திகதி வருகிறது. அத்தமிழ் இன்பம் தந்த அந்தப் புலவனுக்கு ஒரு விழாவை திருமறைக் கலாமன்றம் சிறிய அளவிலாயினும் எடுக்க முன்வர வேண்மென்பதே எனது ஆசையாகும். கருத்தரங்கு கவிஅரங்கு என வைக்கலாம்.

பேராசிரியர் சிவத்தம்பிக்கு சிறப்பான விழா எடுத்ததை எழுத்தாளனென்ற வகையில் நான் அடைந்த இன்பம் இம்மட்டு அம்மட்டு அல்ல. எத்தனையோ கிறிஸ்தவ அறிஞர்கள் இருக்க, வேற்று மதத்தவரொருவருக்கு நீங்கள் விழா எடுத்ததன் மூலம் சமயம் கடந்த ஒரு வரலாறு உங்களுக்கு உண்டு என்பதே எனது கருத்தாகும். திருமறைக் கலாமன்ற இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு எனது பங்களிப்பு என்றும் உண்டு. வாழ்க தமிழ்! வளர்க திருமறைக் கலாமன்றத்தின் தொண்டு!!

**ந. சிவபாதம்**
புத்தொளி, செல்வ அகம் ஆனைக்கோட்டை

தங்களின் "சத்திய வேள்வி" நாடகத்தை 3-4-93ல் தங்கள் கலையரங்கில் கண்டு களித்தேன். நானும் ஒரு நாடக இரசிகன். அது மட்டுமல்ல நடிகமணி வைரமுத்துவுடனும், கே. எம். வாசகரோடும் 15 வருடங்களுக்கு மேல் நட்புடையவன். நடிகமணியின் அரிச்சந்திராவை ஏறத்தாள 500 தடவைகளிற்கு மேல் பார்த்திருப்பேன். எனவே என் விமர்சனத்தை தங்களுக்கு சமர்ப்பிக்கலாம் என எண்ணுகிறேன். சங்கரதாஸ் சுவாமிகளின் நவநாடகங்களில் ஒன்றான அரிச்சந்திரா நாடகத்திற்கு நாடகமணி அவர்கள் உயிர் கொடுத்தார். ஆனால் நீங்கள் அந்நாடகத்திற்கு புத்துயிர் அளித்துள்ளீர்கள். நாடகத் தொடக்கத்தில் தாயினதும் சேயினதும் உரையாடல் மூலம் கதையின் முற்பகுதியை ரசிகர்களுக்கு விளங்கப்படுத்தியது ஒரு அருமையான கற்பனை.

குழந்தையின் மழலைச் சொற்களான "அப்ப" "பின்னை" உண்மையில் இரசிகர்களைக் கவரக் கூடியது. மேடை அமைப்பு மிகவும் பாராட்டக கூடியது. ஆலமரம்- அதில் தொங்கும் விழுதுகள், பட்டமரம், அதன் கீழ் புற்று - அதனூடாக நாகம் வருவது நன்று! நன்று!! நன்று!! பக்கவாத்தியம் நன்றாக இருந்தது. சில சமயங்களில் வசனங்களை நன்றாகக் கேட்க முடியவில்லை என்பது குறை. ஒளியமைப்பு வசனங்களிற்கும் நடிப்புக்கும் ஏற்ற வாறு இருந்தது. உதாரணமாக "பேரிடி மழைதனில் பிணம் தனைச் சுடவுமானாய்" என்ற பாட்டின் போது மின்னல் முழக்கம் நன்றாக இருந்தது. நேரத்தை வீணாக்காத கதை அமைப்பு, தற்பை கொய்வதற்குச் சென்ற லோகிதாசன் இறந்து போகிறான் - அயல் வீட்டுப்பிள்ளைகள் தாயாருக்கு அறிவிப்போம் என்று சொல்கிறார்கள். உடன் சந்திரமதி பிள்ளையைத் தேடி வருகின்றாள். இவர்கள் தாயிடம் சொல்வது, தாய் ஒப்பாரி வைப்பது, வேதியரிடம் அனுமதி கேட்பது இத்தனையும் காட்சியில் இருந்து அகற்றியது, செம்மீன் திரைப்படத்தில் கதாநாயகிக்கு கலியாணம் பேசுவதைக் காட்டி, எச்சில்இலைகளை நாய்கள் சாப்பிட்டுக் கொண்டு நிற்பதைக் காட்டி, கலியாணம் முடிந்துவிட்டது என்றது போலிருந்தது.

சின்னப்பிள்ளைகளின் நடிப்பு மிகவும் பாராட்டக் கூடியது. வைரமுத்துதான் மேடையில் நிற்கிறாரோ என்று எண்ணும் அளவிற்கு தைரியநாதனின் பாட்டு, நடிப்பு; வசனம் எல்லாம் அமைந்திருந்தது. சந்திரமதியாக நடித்தவர் தன் பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளார். விசுவாமித்திரர் கொஞ்ச நேரத்தில் ரசிகர்களைக் கவர்ந்தார். மற்றவர்களின் நடிப்பு குறிப்பிடும் அளவிற்கு இல்லை. குறையும் இல்லை. கலையைப் பாதுகாத்து வளர்க்கும் தங்களை சம்பிர தாயப்படி அல்ல - உண்மையில் மனத்தால் இறைவனை வேண்டுகின்றேன். பல்லாண்டு சுகத்துடன் வாழ வேண்டும் என இறைவன் தங்களை ஆசீர்வதிப்பாராக.

**ஏ. அமலதாஸ்,**
ஏ.ஜீ.ஏ. அலுவலகம், சண்டிலிப்பாய்.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட நேரடித் தொடர்புகளி னால் இவரிடத்தில் எவ்வளவோ உண்டு என்று சிந்திக்க வைத்து விட்டீர்கள். உலக அரங்கிலே மிகப் பரந்தஅளவில் வேரூன்றியுள்ள ஒரு மதத்தின் கோட்பாடுகளை பாதுகாக்கும் பணியில் ஈடுபாடு கொண்டுள்ள தாங்கள், இயல்பாய் அமைந்துள்ள இனப்பற்றும் மொழிப்பற்றும் ஊக்கந்தர முத்தமிழ்க் காவலனாகவும் உயர்ந்து நிற்கின்ற திறன் வியந்த வண்ணம் களிப்புறுகின்றேன். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்கின்ற திருமந்திரர் தந்த திருமூலர் சிந்தனையும் உங்களது உள்ளத்திலும் செயற்பாடுகளிலும் ஊடுருவி இருப்பதைக் கண்டு களிப்படைகின்றேன். தங்களைப் போன்ற அரும் பெரும் பெரியார்களின் வழிகாட்டலிலே உலக சமுதாயமும் சிறப்பாக நம்மினமும் அமைதியுற்று வளங்கள் பல பெருகப் பிரார்த்திக்கின்றேன். தொடர்க உங்களது சிறப்பான பணிகள். நன்றி.

**அ. நமச்சிவாய**
435/10 கோயில் வீதிநல்லூர்

18/7/93ல் நாவலர் மண்டபத்தில் தங்கள் ஆண்டு விழாவில் கலந்துகொண்டேன்.நான் எதிர்பார்க்கவில்லை ஒரு பாதிரியார் திரு உந்தியார் பற்றி இவ்வளவு அழகாக உரையாற்றுவார் என்று. மிகவும் அருமையாக இருந்தது. பாடல்கள் மிகவும் இனிமையாக இருந்தது. அப்பொருள் அது மெய்ப்பொருள் பற்றிப் பேசியவரும் மிக அவதானத்துடனும் நன்கு ஆயத்தப் படுத்தியும் தமது உரையை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து உரையாற்றிய பாதிரியாரும் சமய உரையாடல் பற்றி வெகு ஆழமான கருத்துக்களை முன் வைத்தார். நாடகம் அவர் கருத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தது. உங்கள் நிகழ்ச்சியில் அவதானிக்கக் கூடியதாக இருந்த மிகப் பெரும் சிறப்பென்னவென்றால் எல்லாருமே நன்கு திட்டமிட்டு ஆயத்தப்படுத்தி கவரும்விதத்தில் அழகாக உரையாற்றியதுதான். நன்றியுரை கூறியவர் கூட அறிந்த வரையறைக்குள் நின்றார். தங்கள் பணி பற்றி சிலர் தப்பாக அர்த்தம் கொண்டுள்ளார்கள். ஆனால் நான் நேராக வந்ததால் உண்மை புரிந்து கொண்டேன். தங்கள் பணி சிறக்க மனமார்ந்த வாழ்த்துக்கள்

**க. பரமேஸ்வரன்** ஆடியபாதம் வீதி கொக்குவில் மேற்கு

கலைஞர்கள், கவிஞர்கள் இலக்கியவாதிகளைத் தேர்ந்தெடுத்து, முதல் தரமான நிகழ்ச்சிகளைத் தொகுத்து, தமிழ் மக்களிற்கு வழங்கியதற்கு திருமறைக் கலாமன்றத்திற்கு மீண்டும் ஒரு முறை நன்றி. நாட்டுக்கூத்திற்கு 7-5-93 தொடக்கம் 9-5-93 வரையும் விழா எடுத்தபொழுது, வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களை கௌரவித்து, பரிசில்களும் வழங்கிய தோடு மட்டும் நிற்காது மறைந்த கலைஞர்களாகிய எம். வீ. ஆசீர்வாதம், பக்கிரி சின்னத்துரை, புகுந்தார் யோசேப்பு போன்றவர்களை நினைவு கூர்ந்து, அவர்கள் ஞாபகார்த்தமாகப் பரிசில்களும் வழங்கி, தன் மதிப்பையும் கௌரவத்தையும் புகழ் ஏணியின் உச்சிக்கு உயர்த்திக் கொண்ட திருமறைக் கலாமன்றம் 18,19,20 ஆனி 1993 நாட்களில் இசைக்கு விழா எடுத்தபொழுது திரு எஸ். பாலசிங்கத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததோடு ஈழத்தில் முதலிடம் வகித்து மறைந்த கலைஞர்களாகிய உடுவில் சண்முகரத்தினம், சண்முகப்பிரியா, சோமு ஆகியோர்களையும் 25,26,27 ஆனி 1993 நாட்களில் இலக்கியத்திற்கு விழா எடுத்தபொழுது திரு. கா. சிவத்தம்பி அவர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தபோது, மறைந்த பிரபல நாவல் ஆசிரியர் திரு. கே. டானியல் அவர்களையும் நினைவுகூர்ந்து கௌரவித்து இன்னும் தன் கௌரவத்தையும் மதிப்பையும் உயர்த்தியிருக்கலாம். ஏன்? நிற்க!

நாட்டுக்கூத்திற்கு விழா எடுத்த பொழுது தென்மோடி நாட்டுக் கூத்தான "யூதகுமாரி" மிகவும் நன்றாக இருந்தது. நீண்ட ஒரு கதையைச் சுருக்கி கதையின் கரு அற்றுப்போகாத வண்ணம் மேடையேற்றியதற்கு நெறியாளருக்கு ஒரு சபாஷ். இந்நாடகத்தின் பாத்திரத்தை உணர்ந்து நடித்த நடிகர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். முல்லைத்தீவுப் பாங்கில் திரு. மெற்றாஸ் மெயில் நடித்த கண்ணகியின் கூத்தும் மிகவும் நன்றாக அமைந்துள்ளது.

இசைக்கு விழா எடுத்தபொழுது தொடக்க நாளன்று சங்கீத பூசணம் பூவதி சிதம்பரநாதன் அவர்களின் இசை என்ற தலைப்பில் வழங்கிய விளக்கவுரை ஈழத்து இசைக்கலைஞருக்கு மட்டுமல்ல இரசிகர்களுக்குக் கூட மிகவும் தேவையான ஒரு சொற்பொழிவாக அமைந்தது. இவ்விழாவின்பொழுது தரமான, திறமான, கலைஞர்கள் வழங்கிய இசை மிகவும் நன்றாக அமைந்தது. திரு. பத்மலிங்கத்தின் கச்சேரி போற்றுதற்கரியது. இசைவிழாவின்பொழுது அதி விசேட தரத்திலுள்ள திரு என். பாலசிங்கம் அவர்களை அழைத்துக் கௌரவித்துப் பொன்னாடை போர்த்தியது ஈழத்து இசைக்கலைஞர்களை புளகாங்கிதப் படுத்தக்கூடியதாக இருந்தது. இதனை இளங் கலைஞர் மன்றத்தலைவர் திரு பொன் சுந்தரலிங்கம் உரையாற்றும் பொழுது எந்த மன்றமும் செய்யத் தவறியதை திருமறைக் கலாமன்றம் செய்துவிட்டதைக் நினைத்து மகிழ்ச்சியடைவதைக் கூறியதை மட்டுமல்லாது, அவரும் அவரைத் தொடர்ந்து திரு பத்மலிங்கமும் பொன்னாடை போற்றிக் கௌரவித்தது திருமறைக் கலாமன்றத்தை மேலும் ஓங்கச்செய்ததாக இருந்தது.

இலக்கியத்திற்கு விழா எடுத்தபொழுது மூன்று நாளும் தாங்கள் கொடுத்த தலைப்புக்களான "கவியும் காவியம்" "உரையும் கதையும்" "கவிதையும் கருத்தும்" அருமையானவை.

முதல்நாள் உரையாற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ், என். சிவலிங்கராசா ஆகியோரின் கருத்துக்கள் மனதை விட்டு அகலாது என்றும் நிலைக்கக் கூடியது. அன்று நடைபெற்ற இலக்கிய நாடகமான "ஔவையார்" நன்றாக இருந்தது. இருப்பினும் பாடக்கூடிய ஒருவர் ஔவையாராக நடித்திருக்கலாம் என எண்ணுகிறேன்.; கருதுகிறேன். உரையும் கதையும் நிகழ்வில் கலந்து கொண்ட டோமினிக் ஜீவா, இளையவன், செம்பியன் செல்வன் ஆகியோரின் உரை போற்றக்கூடியவை. அன்று நடைபெற்ற "நீதிகாத்தான்" இலக்கிய நாடகமும் மிகவும் சுவையாக இருந்தது. இந்த நாடகத்தில் நடிகர்கள் அணிந்திருந்த உடைகள் மிகவும் நன்று. "கவிதையும் கருத்தும்" நிகழ்வின் பொழுது வாகரை வாணன், பத்மநாதன், காரை சுந்தரம்பிள்ளை ஆகியவர்களின் கவிதைகள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன. இன்று நடைபெற்ற "இலங்கையர்கோன் விலங்கு" என்ற நாட்டிய நாடகம் மிகவும் சிறப்பாக இருந்தது. பாத்திரங்களின் அபிநயம் அதற்கேற்ப பக்க வாத்தியங்கள் எல்லாம் மிகவும் நன்றாக இருந்தது.

இலக்கிய விழாவின்போது ஆரம்பத்தில் வரவேற்பு நடனம் அருமையாக இருந்தது. இதை பார்வையாளர்கள் அதிகமாக புகழ்ந்ததை நானும் கேட்டேன்.

வருடா வருடம் முத்தமிழிற்கு விழா எடுக்கவேண்டும். ஒவ்வொன்றிற்கும் குறைந்தது ஒரு கிழமையாவது ஒதுக்க வேண்டும் என்று திருமறைக்கலாமன்ற இரசிகர்கள் சார்பில் கேட்டுக் கொண்டு தங்களையும், தங்கள் மன்ற அங்கத்தவர்கள் யாவரையும் இறைவன்

ஆசீர்வதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடை பெறும் தங்கள் மன்ற இரசிகன்.

உண்மையுள்ள

**ஆ. அமலதாஸ்**

உதவி அரசாங்க அதிபர் பணிமனை

சண்டிலிப்பாய்

## ஒரு தர்மத்தின் நளினம்

வாழ்க்கைச் சமுத்திரத்துள்
குதித்துச் சுழியோடிக்
களைத்து
இதயச் சிப்பிகளை
ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி
புத்த தர்ம முத்தை
பத்திரமாய்த் தேடினேன்.

இராகுபோல ஏக்கம்
இதயத்தைக் கௌவ்வ
ஒன்றும் புரியாமல்
நிமிர்ந்து பார்த்தேன்.

சாலை ஓரங்களில்
சந்து பொந்துகளில்
சடைத்துப் புடைத்த
அரச மரங்களாய்
கண்ணைக் கவருகின்ற
வண்ணச்சிலைகளாய்
புத்த தர்மம் எனைப் பார்த்து
நளினம் செய்தது.

- பர்ஜனன் -

## நண்பரைப்போல் நடிப்பவர்கள்

போடுமட்டும் போட்டுக் கழித்தபின்
வீசப்பட்ட செட்டுப்போல்
வீசப்பட்ட நண்பனே!
ஒடிந்து சிதைந்து ஊனமாய்
விழுந்து கிடக்கின்ற ஏணிபோல்
விழுந்து கிடக்கின்ற நண்பனே!

மெல்ல விழி திறந்து மேலே
இருப்பவரைப் பார் அவர்கள்
நேற்றுவரை உன்னுடனே
நண்பரைப் போல் நடித்தவர்கள்

புலுட்டும் மணலில் நடப்பதற்கு
தெருக்கள் தோறும் காலறுந்த
செருப்புக்கள் தேடித் தைத்து
பாவிக்கத் தெரிந்த வல்லோர்.

சுயநலச் சந்தையிலே அன்பை
தயக்கமின்றி ஏலம் போட்டவர்கள்
போலி முகங்காட்டிப் புன்னகைத்து
விருந்து கொடுக்கும் நெஞ்சர்
வருந்தும் மனிதனுக்கு மருந்துக்கும்
உதவாக் கஞ்சர் அன்றோ
நண்பரைப் போல் நடிக்கின்றார்.


- இன்பன் -

# சிறுவர் கலைக்கூடம்










# மன்ற வெளியீடுகள்







**KALAI MUGAM**

| | |
|---|---|
| Published by | : THIRUMARAI KALAMANRAM |
| Editor - in - Chief | : Prof. N.M. Saveri |
| Associate Editor | : P.S. Alfred |
| Executive Editors | : A. Joseph, V. Inparajan |
| Proof reader | : Arul Rajendra |
| Art (cover) | : Ramani |
| Art (inside) | : Sami |
| Layout | : T. Baskaran |
| Printer | : Unie Arts (PVT.) Ltd. |

**கலைமுகம்**

**KALAI MUGAM**

Quarterly Devoted to Literature and the Arts
Centre For Performing Arts

தொடர்புகளுக்கு :

திருமறைக்கலாமன்றம்
238, பிரதானவீதி
யாழ்ப்பாணம்

ஹொட்டேல் இம்பீரியல்
அறை இல. 302
14/14-A1 டுப்பிளிக்கேசன் வீதி
பம்பலப்பிட்டி
கொழும்பு.4
தொலைபேசி: 508722, 581257

PUBLISHED BY :
THIRUMARAI KALAMANRAM
JAFFNA, SRI LANKA

PRINTED BY UNIE ARTS (PVT) LTD.